உ

# அருள் ஒளி



இதழ் 152

வைகாசி 2021

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ துர்க்காதேவி துணை

# மணிவிழா வாழ்த்துகள்



## செஞ்சொற்செல்வர்

## கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் நிறுவுனரும் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயாவின் அறுபதாவது பிறந்தநாளில் சுக நலத்துடன் பல்லாண்டு வாழ்ந்து சமய, சமூக, ஆன்மீக பணிகளைத் தொடர எல்லாம் வல்ல துர்க்காதேவியை மனம், மொழி, மெய்களால் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ப. சேயோன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

T.P : 021 321 3151, 021 224 1909

e.mail: thurkaiammantemple@gmil.com
face book: @tellidurga

வைகாசி - 2021 மாதமலர்

பதிவு இல: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3


## கொரோனாச் சூழ்நிலையில் ஆலய விழாக்கள்

சைவாலயங்களில் நித்தமும் காலந்தவறாது பூசை நடைபெறவேண்டும் என்பது சைவாகம விதி. பூசைகள் தடைப்படின் நாட்டுக்கு கேடு எனத் திருமந்திரம் கூறுகிறது. எனவே ஆலயங்களில் நித்திய பூசை எவ்வித தடையுமின்றி நடைபெறவேண்டும். நைமித்திய நெறிமுறைகளாகிய திருவிழாக்கள் நடாத்துவது பெரும் இடர்ப்பாடாகவுள்ளது. கோவில்களில் மக்கள் கூடுவதை சுகாதாரத்துறையினர் தடுத்து வருகின்றார்கள். கொரோனாவின் தாக்கத்திலிருந்து மக்களை கட்டுப்படுத்தாவிட்டால் பேராபத்து எம்மை சூழ்ந்து விடும் என எம்மை எச்சரிக்கை விடுகிறார்கள்.

இந்நிலையில் ஆலயங்களை நிர்வகிப்பவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் அவதியுறுகிறார்கள். எதுவாயினும் இந்நோயின் ஆபத்திலிருந்து மக்களை காக்கவேண்டிய பொறுப்பு சமயத்தை வழிநடத்தும் அனைவருக்கும் உரிய பாரிய பொறுப்பாகும். எனவே இயன்றவரை ஆலய விழாக்களை அமைதியாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஆலய அறங்காவலர்களது தலையாய கடமையாகும்.

சமூக இடைவெளிகளைப் பின்பற்றி வழிபாடு செய்யும் பண்பு வளர்வதாக இல்லை. இதனால் சுகாதாரப் பகுதியினர் கோவில்களை கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மிக இக்கட்டான காலகட்டம். திருவிழாக்கள் பொதுவாக நடைபெறும் காலம். என் செய்வது? பக்தர்கள் நிலைமையைக் கருத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நடக்கவேண்டும். சரியான அனுமதியைப் பெற்று முக்கியமான ஆலய வைபவங்கள் மட்டும் நடைபெறுவது முக்கியம். எனவே பெருந் திருவிழாக்களை பெருங் கூட்டத்தோடு நடாத்துவது என்பது தற்கால சூழலுக்குப் பொருந்தாது.

தெய்வங்களிடம் எமது நிலையினை முறையிடுவதை விட வழியில்லை. எல்லாம் எமது தவக்குறைவு. எமது அயல் நாடகிய பாரத தேசத்தில் சில மாநிலங்களில் மக்கள் படும் அவலத்தை நாம் ஊடகங்கள் வாயிலாக காண்கிறோம். நெஞ்சை உருக்கும் காட்சி. இறந்தவர்களின் உடம்பை தகனம் செய்வதில் அவர்கள்படும் துயர் காண்கின்றோம். எனவே அத்தகைய அப்பாவி மக்களுக்காகவும், எம்மண்ணில் இன் நோயினால் இறந்தவர்களுக்காகவும் நாம் பிரார்த்திக்க வேண்டும். அதே வேளையில் இக் கொடிய நோயிலிருந்து உலகம் விடுபட அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும். இந்நிலையில் திருவிழாக் காலங்களில் மிக கவனமாக நடந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் என்பதை யாவரும் தெளிவாக அறிந்து செயற்பட வேண்டும்.

எல்லாம் இறை சித்தம் என்று இறையடியவர்கள் உணர்ந்து சீராக சிந்தித்து நடக்க வேண்டியது மேன்மை தரும்.


உ

அம்பாள் துணை


தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தலைவாசற் கோபுரத் திருப்பணி

ஸ்ரீ துர்க்கை அம்பாளின் தலைவாசற் கோபுரத் திருப்பணிக்கான அன்பளிப்புக்களை பின்வரும் வங்கிக் கணக்கின் மூலம் செலுத்தலாம். அல்லது தேவஸ்தான அலுவலகத்தில் நேரடியாக வழங்கி பற்றுசீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.

**இலங்கை வங்கி, சுன்னாகம்.**

**கணக்கு இலக்கம்: 77683985**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத் தந்தையின் பிறந்தநாள்

**கோபாலசிங்கம் டயானா,**
தரம் - 07 மாணவி,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

இயற்கை எழில்மிகு தெல்லிப்பழை துர்க்கை அம்பாளினுடைய இறைப் பெருமகனார் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஐயாவினுடைய சேவைகள் அளப்பரியன. அந்தவகையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குழந்தைகளுக்காக தங்கம்மா அப்பாக்குட்டி அமைத்த மகளிர் விடுதியின் தலைவராகத் திகழும் இவர் எமது தந்தை எனும் ஸ்தானத்தில் போற்றப்படத்தக்கவர். பெண்பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக முன்வந்த இவர் எமது கண்களுக்கு தெய்வமாகவே தெரிகிறார் உலகம் எனும் இச் சிறிய வட்டத்தில் இப்படி ஒரு மனிதனைக் காண்பது அரிது எனக் கூறுகின்றேன். ஒரு துளிநீர் கூட வீணாகச்சிந்தாமல் கண்ணுட் கருமணிபோல் எமைகாக்கின்றார் இவர். விடுதியாயிருப்பதால் வெளிச்சமூகம் சிறுவர்களை இங்கு சிறைக் கைதிகள் போல் வாழ வைப்பதாக நினைக்கலாம். ஆனால் அப்படிக்கூற நான் அனுமதிக்கமாட்டேன். இது விடுதியாயிருந்தாலும் எமக்குரிய உரிமை, சுதந்திரம் எமக்காகவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு எமக்குரிய அன்பு மற்றும் அரவணைப்பினை எமது பாதுகாவலர்கள் தாராளமாக வழங்குகின்றனர். உணவு, உடை போன்றவற்றில் எவ்விதமான குறையும் இங்கு காணப்படுவதில்லை. அத்தோடு எமக்குரிய விளையாட்டு பூங்கா அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஆரோக்கிய மேம்பாட்டிற்காக யோகாசனப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. குடிநீர் வசதி போதியளவு காணப்படுகின்றது. படிப்பதற்கு, உணவு அருந்துவதற்கு, ஓய்வு எடுப்பதற்கு, கலைகளை கற்பதற்கும், கணனி கற்பதற்கும் என பல்வகைக் கட்டிடங்கள் எமக்காக அமைக்கப்பட்டுள்ளன.

**“காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது”**

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க காலச் சூழ்நிலையை உணர்ந்து உதவி செய்ய முன்வந்த ஐயாவினது புகழ் பூவுலகத்தையும் விடப் பெரியது. அவரது அன்பாலும், அரவணைப்பாலும் எமக்கு தந்தையில்லை என்பது மறந்து விட்டது. உத்தமனாய் எமக்காக தன்வாழ்வை சமர்ப்பணம் செய்த ஐயா அவர்களை நான் வாழ்வில் மறவேன்.

உங்கள் முகம் பார்த்தால் ஓர் சந்தோசம் பூக்குமைய்யா! தோல்விகள் கண்டாலும் துவண்டு போகா உங்கள் உறுதியும், கவலைகள் கண்டாலும் சோர்வடையா உங்கள் உள்ளமும் எனக்கு ஓர் புதுமையான அனுபவமய்யா! உங்கள் அரும்பெரும் சேவைகளை எண்ணி ஆச்சரியமடைகிறோம். இந்து சமய வளர்ச்சிக்காக அரும் பாடுபடும் உம்மைக் கண்டதால் கும்பிடப் போன தெய்வம் கண்முன் நிற்பது போல் உள்ளதப்பா! அன்புமழையினில் எமை நனைய வைத்தீரே அப்பா! உமது அன்பை எதற்கு ஒப்பிடுவது கூறுமப்பா! கண்டிப்பாய் நீர் இருந்தும் கருணையுடன் எமைக் காப்பீரே! சத்திய நெறியில் சத்தியவானாய் உம்மை நினைக்க நினைக்க என் மனம் பெருமையடைவது மட்டுமல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் குளிர்வடைகின்றது. அயராது உழைத்து எமக்காக வாழும் தம்மை ஓர் தந்தை எனும் ஸ்தானத்தில் வைப்பதற்கு நான் பெருமகிழ்வடைகிறேன். ஜாதி பேதமறியாது பிள்ளைகளைப் பார்க்கும் தம் கண்களும் பாரபட்சமின்றி அன்பு காட்டி வழிநடத்தும் தம் மனமும் இக்கால சூழ்நிலைக்குப் புதுமையானவை. அவ் அன்புத் தந்தை எனும் அதிகாரத்தை உம்வசமாக்கி விட்டீரே உமக்கு நாம் நன்றிக்கடன்பட்டுள்ளோம் தந்தையே!. எமைக் கல்வி கற்கவைத்து பட்டதாரிகளாக்கி எம் பெற்றோர் போல் பேணிக் காக்கின்றீரே அப்பா!



**'அப்பா எனும் மூன்றெழுத்துச் சொல்லை**
**அற்புதமாக்கி விட்டீரே'**

உம்மை நினைக்க நினைக்க என் மனதில் மகிழ்ச்சி ஊஞ்சலாடுகிறது அப்பா! உம்மைப்போல் ஒரு மகான் இங்கு யார் என்று கூறும்? யார் உளர்? ஒருவருமில்லை.

**"அன்பெனும் ஔடதத்தால் உருவாக்கப்பட்ட அன்புச் சிலையல்லோ நீர்!**
**அமுது என இனிக்கும் தேன் சொரிந்த நறுமணம் கமழ் பூவெல்லோ நீர்!"**

செந்தமிழ் நாடது இலங்கையிலே தேன் பொழில்
சூழ் தெல்லிப்பழையிலே வாழ்கின்றார் ஓர் மகான்
கலாநிதி என்னும் பட்டம் பெற்று
கலை மகனாய் வாழ்கிறீரே!

திருமுருகன் எனும் பெயர் பெற்று வளர்த்தோரின்
பெருமை காக்கின்றீரே!
பெயருக்கேற்றாற் போல் மா மனிதராய்
வாழ்கின்றீரே ஐயா!
உம் இனிய செம்மைமொழி கேட்டதும்
காது இனிக்குதே!
உம் திருநாமம் சொன்னதும்
மனம் அமைதியடைகிறதே!

வார்த்தையால் வர்ணிக்க முடியாத உம் சேவைகளை
நினைந்து பெரும் அகமகிழ்வடைகின்றேன்
தந்தையே உம் தன்மானக் குணமும்
தாய்மை மிகு மனமும்

தலமதில் தாம் பேசும் உரையும்
உன்னத குணங்களாகும்
கும்பிடப் போன தெய்வம் என் கண் முன்னே வந்து
நிற்பது போல் உள்ளதப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமளிக்கும்
எம் வாழ்விற்கு உமைப் போல்
ஒரு சிறந்த மகான் வேண்டுமப்பா
உமை என்றும் மறவாமல்

நன்றியுடன் வாழ்வேனப்பா
வாழ்வு தந்த எம் தெய்வமே
இனிய பிறந்தநாள் நல்வாழ்த்து
உம்மை வந்தடையட்டும்

## சைவசமயிகட்கு உரிய முக்கிய இலக்கணங்கள்

கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய் முதலாகிய பாவங்களை மரண பரியந்தம் விலக்கி நடப்பது. உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல், வறியவர்களுக்கு ஒருபிடி அன்ன மாவது கொடுத்தல், செய்ந்நன்றியறிதல் முதலிய இந்தத் தருமங்களை மரணபரியந்தம் பாதுகாத்து நடப்பது.

பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரணபரியந்தமுபசரிப்பது. சிவதீட்சை பெற்றுக்கொள்வது. விபூதி ருத்திராக்கம் தரிப்பது.

சந்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாட்சரஜபம், சிவஸ்தோத்திரம் இவைகளை மரணபரியந்தம் நித்தமும் ஒரு பத்து நிமிஷ நேரமாவது மனத்தை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது. நித்தமுமாவது, புண்ணியகாலங்களிலாவது சிவலிங்கப்பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது. சைவவினாவிடை, சிதம்பரமான்மிய வசனம், பெரியபுராண வசனம் முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

சிவபெருமானுடைய மகிமையும், புண்ணிய பாவங்களையும், சிவபெருமானைவழிபடும்முறைமையையும்அறிவிக்கிறசைவப்பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது. சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளை கேளாது நீங்கி விடுவது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சைவசமய குரவர் நால்வருடைய திருநட்சத்திரங்களிலே அவரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங்கொடுத்து, விரதத்துடன் இருப்பது.

செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும், செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாது விட்டாலும், மனம் பதைபதைத்து அஞ்சி நடுநடுங்கி குருவை அடுத்து, அவர் சிவாகமப் பிரகாரம் விதித்த பிராயச்சித்தத்தை விசுவாசத்துடன் செய்து கொள்வது.

**- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு என்னும் நூலில் (1954) உள்ள 'சைவசமயி' என்னும் கட்டுரையில் இருந்து.....**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் கிரியைகளும்

**வித்யா பூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A, (Hons.),**
(கோப்பாய் சிவம்) அமைப்பாளர், சர்வானந்தமய பீடம்.

ஆதிகாலத்திலிருந்தே நமது முன்னோர்கள் இயற்கைப் பொருட்களைத் தெய்வங்களாக மதித்துப் போற்றி வணங்கினர். உலகத்திற் கிடைத்துள்ள ஆதி இலக்கியங்களிலேயே மிகப் பழமையானதாகக் கருதப்படும் இருக்கு வேதத்தில் இயற்கைச் சக்திகளைப் பலவிதமாக வர்ணித்துப் பாடுகின்ற அழகிய பாடல்கள் பல காணப்படுகின்றன. நிலம் (பூமி) நீர், தீ, ஆகாயம், காற்று ஆகிய ஐந்தும் ஏனைய இயற்கைச் சக்திகள் யாவற்றுக்கும் அடிப்படையாக அமைவதால் பஞ்சபூதங்கள் என இவற்றை அழைத்தனர். இந்த ஐந்து மூலப் பொருட்களால் உருவானதே பிரபஞ்சம் எனப்படும்.

மனிதனால் ஆக்கி அழிக்க முடியாமலிருக்கும் இவற்றை ஓர் ஒழுங்குமுறையில் நிர்வகிக்கும் ஒருவன் இருப்பதை இதனால் உணர்ந்து அவரே நமது தலைவன் என்று வணங்கினர். அவரே நமது கடவுள் ஆவார்.

சூரியன் என்ற மிகப்பெரிய அக்கினிக் கோளமே இந்தப் பெரிய பிரபஞ்சத்தின் மத்திய சக்தி என இன்றைய விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டறிந்துள்ளனர். சூரியன் எந்த நேரமும் பேரொளியும், பெருவெப்பத்தையும் வீசியபடி சுழன்று கொண்டே இருக்கிறது. சூரியனைச் சுற்றிப் பல நட்சத்திரங்களும், கோள்களும் வலம்வருவதுடன் தம்மைத் தாமேயும் சுற்றுகின்றன.

நாம் வாழும் பூமியும் இவ்வாறுதான் சூரியனை வலம் வருகிறது. பூமி கோளவடிவமாக இருப்பினும் அதிலுள்ள பொருட்கள் விழாமல் இருப்பதற்கு அதன் மத்தியிலுள்ள ஈர்ப்புச் சக்தியே காரணமாக உள்ளது. அதேபோல இரவு - பகல், வெப்பம் - குளிர், மழை - வெயில் முதலிய மாற்றங்கள் ஏற்படுவதற்குப் பிரபஞ்சத்தின் சுழற்சி இயக்கமே காரணமாக உள்ளது.

இயங்கும் பொருட்கள் எப்போதும் சக்தியுடையவை ஆகின்றன. இயக்கம் இல்லாவிட்டாற் சக்தி இல்லை. அதனால் இறைவன் என்றும் இயங்கிக் கொண்டிருக்கிறார் என்று நமது முன்னோர் கருதினார். அதனால் அவரை நடராஜ வடிவத்திற் கண்டு மகிழ்ந்தனர்.

ஆனந்த நடனம் என்னும் அவரது நடனமே இந்தப் பிரபஞ்சத்தை இயங்கிக் கொண்டிருக்கிறது. இயங்கும்போது சக்தி உண்டாகிறது. சக்தி என்பதை ஒரு பெண்ணாக உருவகித்தனர். அந்தச் சக்தியே நடராஜரின் அருகிற் சிவகாமி என்ற பெயரிற் காணப்படுகிறார்.

இறைவன் எல்லாப் பொருட்களினுள்ளும் மறைந்திருக்கின்றார். எல்லாச் சக்திகளாகவும் அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். அதனால் அவர் உருவ மற்றவராகக் கருதப்பட்டாலும் அவரை நினைத்து வழிபட ஓர் அடையாளச் சின்னம் தேவை என நம் முன்னோர்கள் கருதினர். அதனாற் சிவலிங்க வடிவம் உணரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி சுடராக, நெருப்பு கோளமாக, பேரொளி வடிவமாக இறைவனைக் கண்டு வழிபடும் மரபு இந்துக்களாகிய நமது முன்னோர்களிடம் மட்டுமல்லாமல் வேறு பல மக்களிடமும் நீண்ட காலம் காணப்பட்டது. அத்தகைய பேரொளி பொருந்திய அக்கினிச்சுடரின் இறுகிய வடிவமே சிவலிங்க வடிவமாகிறது. அது ஒரு கோள வடிவம் போலக் காணப்படுவதால் தொடக்கம், முடிவு எதுவும் இல்லாதது.

**சிவசக்தி ஐக்கியம்**

இந்தச் சிவலிங்க வடிவத்தில் மேற்பகுதியாகிய லிங்கம் சிவன் என்று ஆண் தெய்வமாகவும், கீழ்ப்பகுதியாகிய பீடம் (ஆவுடையார்) சக்தி வடிவமாகிய பெண் தெய்வம் என்று உருவகம் செய்வர்.

அன்னையும் தந்தையும் இணைந்து செயற்படும் போது தான் நமது குடும்பம் என்ற இல்லற வாழ்க்கை இனிமையாக நகருகிறது. இந்தத் தத்துவமே சிவலிங்க வடிவம், நடராஜர், சிவகாமி வடிவங்களிற் புலப்படுத்தப்படுகின்றது. இன்னொரு வடிவத்தையும் இந்துக்கள் போற்றி வணங்குகின்றனர். அர்த்த நாரீஸ்வரர் அல்லது மாதொரு பாகர் என அழைக்கப்படும் இவ்வடிவம் பாதி ஆணும், பாதி பெண்ணும் சேர்ந்த வடிவமாகும்.

விஞ்ஞான் அடிப்படையிலும் நேர்முனைவும் எதிர் முனையும் சேரும் போது தான் சக்தி பிறக்கிறது. காந்த சக்தியானது. வடமுனைவையும், தென் முனைவையும் கொண்டுள்ளது. மூலப்பொருளாக இன்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ள அணுக்களும் நேர் முனைவாகிய புரோத்தன்களையும் எதிர் முனைவாகிய இலத்திரன்களையும் கொண்டவை அல்லவா? பழமும் அதன் சுவையும் போல, நெருப்பும் அதன் சூடும்போல, மலரும் அதன் மணமும் போல, சிவனும் அம்பிகையும் ஒன்றாக இணைந்திருந்து இப்பிரபஞ்சம் அனைத்திற்கும் அன்னை தந்தையாக (அம்மை அப்பராக) இருந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைப் புரிகின்றார்கள்.

**ஆகமங்கள்**

> **“வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்**
> **ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுவர்”**

என்ற திருமுறை நூல் கூறுவதற்கிணங்க வேதமும், ஆகமமும் இறைவனாலேயே அருளப்பட்டவை. முன்னைய நமது ரிஷிகள் அவற்றைத் தம் ஞானம் என்னும் அதீத மெய்யுணர்வினால் உணர்ந்து உலகிற்குத் தந்தனர்.

வேதம் காட்டிய பிரபஞ்ச சக்தியை ஓரிடத்திற் குவித்து வைத்து, அங்கு நாம் சென்று நமக்கு வேண்டிய சக்தியைப் பெற்று உயர்வடையும் வழியை ஆகமங்கள் காட்டுகின்றன. ஆலயங்களை அமைத்து அங்கு உருவங்களை வைத்து அவற்றை வழிபட்டு இறையுணர்வு பெறச் செய்வதே ஆகமங்களின் நோக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகம அடிப்படையில் அமைந்த ஆலய அமைப்பும், அங்கு நடைபெறும் திருவுருவ வழிபாடும், கணித விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், மனோதத்துவ விஞ்ஞானம் ஆகியவற்றின் இணைப்பையும் தனக்குள் கொண்டிருப்பது வியப்புக்குரிய ஒன்று.

**ஆலய அமைப்பு**

ஆகமங்களிற் குறிப்பிடப்பட்டுள்ள சரியான அளவுப் பிரமாணங்களில் ஆலயம் கட்டப்படுகின்றது. அதன் பாகங்கள் ஒவ்வொன்றும் அதற்கென குறிப்பிடப்பட்டுள்ள திசைகள், கோணங்கள், ஸ்தானங்கள் என்பன சரியாக அமையும் படி அமைக்கப்பட்டிருக்கும். சிவாகமங்களின் வழிநூல்களாகிய சிற்ப சாஸ்திரங்கள் ஆலயங்களை அமைக்கும் முறை எடுத்துக் கூறுகின்றன.

வான்நோக்கி உயர்ந்து, குவிந்து கூம்பியிருக்கும் கோபுரங்களை அவை கொண்டிருக்கும் கருவறை அல்லது மூலஸ்தானம் எனப்படும் முக்கிய பகுதி சற்சதுரமாக மூன்று பக்கங்கள் முழுமையாக மூடப்பெற்று முன்புறம் மட்டும் திறக்கப்பட்டிருக்கும். அதுவும் திரைச்சேலை ஒன்றினால் மறைக்கப்பட்டிருக்கும். வழிபாட்டின் போது மட்டும் திறக்கப்படும். அவ்வேளையில் அங்கு தீபம் ஏற்றிக் காட்டப்படும்.

இவ்வமைப்பு முறை, செயற்பாடு ஆகியவற்றில் சைவசித்தாந்த தத்துவக் கருத்து உள்ளடங்கி இருக்கும் அதே நேரத்தில் அறிவியல் விளக்கமும் இருக்கின்றது.

மேல்நோக்கிக் குந்து உயர்ந்திருக்கும் கலசத்தினூடாகப் பிரபஞ்ச சக்தி உள்ளீர்க்கப்பட்டுப் படிப்படியாகப் பரந்து கீழிறங்கி மறுபடி கருவறையின் மையத்தில், அதற்கென விதிக்கப்பட்ட இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருவுருவத்திற் சேகரிக்கப்படும். வழிபாட்டு வேளையில் இறைவன் திருவருட் சக்தியாகிய பிரபஞ்ச சக்தியின் கதிர் வீச்சு அங்கிருந்து நம்மிடம் வருகிறது.

ஆலயத்தின் அமைப்பு மனித உடலை ஒத்திருப்பதாக அறிஞர்கள் விளங்கின்றனர். நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கும் மனிதனை கற்பனை செய்து பாருங்கள்.

சிரசு எனப்படும் தலைதான் கருவறை சக்தியை உள்ளீர்த்து உயிர்ச் சுவாசத்தை நடத்தும் மூக்குத்தான் ஸ்தூபி. மூளையின் இடத்திற்தான் திருவுருவம் இருக்கிறது. கழுத்தைக் குறிப்பது அர்த்த மண்டபம், மார்பை குறிப்பது மஹாமண்டபம், மார்பின் இடது புறத்தில் இதயம் உண்டு. அதேபோல மஹாமண்டபத்தின் இடப்புறத்திற் சக்திக்குரிய சந்நிதானம் அமைகிறது.

இதயம், கழுத்து ஆகிய பகுதிகள்தான் நினைவு, செயற்பாடு, ஓசை என்பவற்றுக்கு ஆதாரமாகின்றன. மஹாமண்டபம், அர்த்தமண்டபம் ஆகியவற்றிற் தான் கிரியைகள், மந்திரம் ஓதல் முதலிய நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றைக் குறிப்பது ஸ்நபனமண்டபம், வயிற்றிலுள்ள ஜடராக்கினியைக் குறிக்க ஓமகுண்டத்தில் அக்கினி வளர்க்கப்படுகின்றது. ஜடராக்கினி என்பது வயிற்றினுள் மறைந்திருக்கும் வெப்பசக்தி இதுவே உணவைச் சீரணிக்கச் செய்து சக்தியை உடல் எங்கும் பரப்புகிறது.

கால்கள் ஏனைய மண்டபங்களையும், கைகள் உள்வீதியையும், பாதங்கள் ராஜகோபுரத்தையும் குறிக்கின்றன. "அண்டத்திலுள்ளது பிண்டத்தில்" என்பர். அண்டம் என்பது பிரபஞ்சம். பிண்டம் என்பது நமது உடல், பிரபஞ்ச வடிவிலேயே நமது உடல் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வுடல் நீள்வட்ட வடிவிலே உருவாகியுள்ளது. இது அற்புதமானதொரு தொடர்பாகும்.

கருங்கல்லினால் அமைக்கப்பட்ட விக்கிரகம் கருவறையின் உள்ளே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். கருங்கல் அதிர்வுகளை உள்ளீர்த்து, அதனைப் படிப் படியாக வெளிவிடும் தன்மை வாய்ந்தது. அங்கு வைக்கப்படும் திருவுருவங்கள் ஆகமங்களிற் சொல்லப்பட்ட விதிமுறைப்படி அமைக்கப்பட்டிருக்கும்.

**திருவுருங்கள்**

நடேசர், சண்முகர் மற்றும் தாம்ர விக்கிரகம் எனப்படும் பஞ்சலோகத் திருவுருவங்கள் ஸ்நபன மண்டபத்திற் சபை என்ற பெயரில் தனியான சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும். இவை எழுந்தருளிகள் அல்லது உற்சவ மூர்த்திகள் எனப்படும்.

இவை விழாக்களின் போது வீதி உலாவுக்கு எழுந்தருளுகின்றன. சக்தியைத் தற்காலிகமாகச் சேகரித்து உடனுக்குடன் வெளியிடுவதன் மூலம் எல்லா வெளியிடங்களிலும் சக்திக் கதிர் வீச்சினை இவை ஏற்படுத்துகின்றன.

ஸ்தம்ப மண்டபமும் வீதியும் சேர்ந்து பிரதான பகுதி பெரியதாக அகன்று, அடியார்கள் பலர் ஒன்றுசேர்ந்து வழிபாடு செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டிருக்கும்.

கிராம மக்கள் யாவரும் விழாக்காலங்களில் ஆலயத்திலே ஒன்றுகூடி ஒற்றுமையாக வழிபாடுகளில் ஈடுபட்டு மனச்சாந்தி பேணுவதுடன் சுவாமியை வீதியுலா எடுத்து வருதல். தேர் இழுத்தல் போன்றவற்றில் ஒன்று சேர்ந்து ஈடுபட்டு உற்சாகமும், எழுச்சியும் அடைவர். சமூக ஒற்றுமையும், மகிழ்ச்சியும், எழுச்சியும் ஆலயம் சார்ந்து உருவாகுதல் குறிப்பிடத்தக்கது.

**ஆலய வழிபாடு**

ஆலயம் சென்று வழிபடுதல் என்பது இந்துக்களின் வாழ்க்கையில் மிக முக்கிய இடம் வகிக்கின்றது. தினமும் ஆலயம் செல்வது சாலச் சிறந்தது. இயலாதவர்கள் செவ்வாய், வெள்ளி மற்றும் விஷேட விரத, விழாக்காலங்களிற் சென்று வழிபடுவது அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபூதி தரித்தல்**

ஆலயம் செல்லும் போது ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, விபூதி தரித்துக் கொண்டு செல்லவேண்டும். விபூதியை மூன்று விரல்களால் எடுத்து வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று அண்ணாந்து நிலத்திலே சிந்தாவண்ணம் “சிவசிவ” என உச்சரித்தவாறு தரிக்கவேண்டும். நெற்றியிலும் மார்பிலும் இவ்வாறு பரவித் தரித்தல் உத்தூளனம் எனப்படும்.

சமயதீட்சை பெற்றவர்கள் விபூதியை நீரிற் குழைத்து உடலின் குறிப்பிட்ட இடங்களில், அதற்குரிய மந்திரங்களை உச்சரித்தவாறு தரித்தல் வேண்டும். இது திரிபுண்டரம் எனப்படும். ஆலய வழிபாட்டிற்கு செல்லும் போது இன்னொரு சிவசின்னமாகிய உருத்திராக்கம் அணிதலும் நன்று.

பசுவின் சாணத்தைக் காயவைத்து விராட்டியாக்கியபின் நல்ல நெருப்பிலே இவற்றைக் சுட்டு, வெண்ணிறச் சம்பலாக வரும்போது அதனை எடுத்து அரித்து வாசனைப் பூக்கள் சேர்த்து விபூதி (திருநீறு) தயாரிக்கப்படுகின்றது. பட்டுப்பையில் அல்லது தேங்காய்ச் சிரட்டையிலே உருவாக்கப்பட்ட குடுவையில் அல்லது விபூதி மடலில் திருநீற்றினைச் சேகரித்து வைத்திருக்க வேண்டும்.

இந்த விபூதியை நாம் பூசுகின்ற வேளையெல்லாம் இறைவனை நினைத்துக் கொள்கின்றோம். நாம் சைவர்கள் என்பதை எப்போதும் நமது நினைவிற் கொள்வதோடு மற்றவர்களுக்கு முன் நம்மை இனங்காட்டும் ஓர் அடையாளமாகவும் விபூதி அமைகின்றது.

திருநீறு நமது உடலில் தரிக்கப்படும் போது உடலிலுள்ள தீய நீர்த்தன்மைகள் உறிஞ்சப்பட்டு உடல் இறுக்கமான கட்டமைப்பைப் பெறுகின்றது.

**ஆடை அணிகலன் அலங்காரங்கள்**

ஆலயம் செல்லும் போது அதற்கே உரியவகையில் நமது பண்பாட்டு பாரம்பரியங்களுக்கேற்ற வகையில் நம்மைத் தயார்ப்படுத்துதல் அவசியம்.

சாத்வீகமான உணர்வுகளையும் தூய்மையான மன எண்ணங்களையும் ஏற்படுத்தக்கூடிய தோற்றம் மிகவும் அவசியம். ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். அதற்கிணங்க, நம்மைப் பார்க்கும் போதே பிறர் மனதில் ஒரு மரியாதையுணர்வு உருவாக்கக் கூடியதாக நமது ஆடை அலங்காரங்கள் இருக்க வேண்டும்.

வெண்மை நிறமான வேட்டி சால்வையே ஆண்களுக்கு உகந்தது. குளிர் தேசங்களில் வாழ்வோர் மேலங்கி அணிய வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் வெண்மையான ஷேட் உகந்தது.

பெண்கள் உடலை முழுமையாக மூடியிருக்கும் கீழைத் தேயப் பண்பாட்டு உணர்வுக்குகந்த ஆடைகளை அணியவேண்டும். முக்கியமாகப் பிறர் மனத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரமான சிந்தனை தூண்டப்படாத வண்ணம் சேலை. அல்லது அரைத்தாவணி போன்றவை விரும்பத்தக்கது. இளவர்ணங்கள் கொண்டவையாகவும், எளிமையானவையாகவும் இருத்தல் நன்று.

இளம் நிறங்களும், எளிமையும், எப்போதும் சாத்வீக உணர்வைத் தூண்டி, மனஅமைதி தரக்கூடியவை, சாந்தியையும் அருளையும் நாடி ஆலயம் செல்லும் போது நமக்கும் பிறர்க்கும் நலம் பயக்கும் ஆடைகள் அவையே ஆகும்.

பெண்கள் அவசியம் திலகம் எனப்படும் பொட்டு அணிதல் வேண்டும். கல்யாணமாகாத கன்னிப் பெண்கள் கறுப்பு நிறமான பொட்டு அணிவர். கல்யாணமான சுமங்கலிப் பெண்கள் சிவப்பு நிறக் குங்குமப் பொட்டு அணிவர். சுமங்கலி நெற்றியில் மட்டுமல்லாமல் உச்சிவகிட்டின் ஆரம்பத்திலும் திலகம் அணிய வேண்டும். அங்கு இலக்குமி வாசம் செய்கிறாள்.

ஆண்கள் சந்தனப்பொட்டு அணிதல் வரவேற்கத்தக்கது. மஞ்சள் நிறச் சந்தனம் சிவனையும், சிவப்புநிறக் குங்குமம் சக்தியையும் குறிப்பவை. சக்தி உபாசகர்களாகிய ஆண்களும் குங்குமம் விரும்பி அணிவதுண்டு.

பூசைகளை நடத்துகின்ற சிவாசாரியார்கள் சிவ-சக்தி ஐக்கியத்தை உணர்த்தும் வகையிற் சந்தனம், குங்குமம் இரண்டையும் அணிவதுண்டு. பொதுவாக நெற்றிப்பொட்டு என்ற இடம் மூன்றாவது கண் ஆகிய அறிவுக் கண்ணுக்குரிய இடமாகும். அந்த இடத்திற் பல நரம்புகள் சந்திக்கின்றன. அந்த இடத்தைக் குளிர்மையான வைத்திருப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம் பேணப்படுகிறது.

மேலும், ஹிப்நொட்டிசம் என்னும் வசியக்கலைமூலம் நம்மைப் பிறர் வசப்படுத்த முனையும் போது நெற்றியிற் புருவ மத்தியே பயன்பாட்டுக்குரிய இடமாகிறது. அதனைத் தடுக்கும் காவலாகவும் திலகம் அமைகின்றது. கைவளையல்களும், கழுத்து காது, மூக்கு முதலிய அங்கங்களில் தங்க நகைகளும் அணிவது பெண்களுக்கு அவசியமானதே. அது லஷ்மிகரமாக அமைகிறது. ஆடம்பரமில்லாமல் பிறர் பார்த்து ஏங்கும் வகையிலில்லாமல் இவற்றை அணிவது நன்று.

**கையுறை**

குழந்தைகள், நோயாளர்கள், வயோதிபர்கள், பெரியோர்கள் ஆகியோரிடம் நாம் போகும்போது வெறுங்கையுடன் போகக்கூடாது. கையில் ஏதாவது அன்பளிப்புப் பொருட்கள் கொண்டுபோவது நமது பண்பாட்டு மரபு அவற்றை கையுறை என்பர். அவ்விதமே ஆண்டவனை வணங்க ஆலயம் செல்லும் போதும் அவருக்குச் சமர்ப்பிக்கத் தகுந்த பொருட்களை நமது தகுதிக்கு ஏற்ற வகையில் எடுத்துச் செல்லவேண்டும்.

பித்தளைத் தட்டு அல்லது கூடை ஒன்றில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், பூக்கள், கற்பூரம், காணிக்கையாகப் பணம் என்பவற்றைக் கொண்டுபோவது சிறப்பு. அர்ச்சனைப் பொருள் என இவற்றை கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட இறைவனின் அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பழவகைகள் முதலியவற்றையும் ஹோமத்துக்குரிய நெய்யையும் கோவிலுக்குக் கொண்டு போகலாம். இயலாதவர் மிகக் குறைந்த அளவிற் பூசைக்குரிய பூக்கள், பத்திரங்கள் (இலைகள்) என்பவற்றையாவது எடுத்துச் செல்லலாம்.

**ஆலயம் செல்லும் முறை**

இப்பொருட்கள் இறைவனுக்குரியவை. புனிதமானவை. எனவே கீழே தொங்கவிடாது மார்பளவில் இரு கைகளாலும் தாங்கிய படி சிவநாமங்களை உச்சரித்தபடி இறை சிந்தனையுடன் ஆலயம் செல்லவேண்டும். தூரத்திலே ஆலயத்தின் கோபுரம் தெரியும். அதனை நோக்கிச் சிரசின் மீது இரு கைகளையும் குவித்து வணங்கி அருகிற் சென்றதும் கிணற்றிலோ அன்றித் திருக்குளத்திலோ வேறு நீர்நிலைகளிலோ கைக்கால்களை சுத்தம் செய்து காணிக்கைப் பொருட்களையும் அலம்பி எடுத்துக் கொண்டு அமைதியாக உள்ளே செல்லவேண்டும்.

**வழிபடும் முறைகள்**

கோபுர வாசலினுள்ளே சென்றதும் கொடிமரத்திற்கு இப்பால் வீழ்ந்து வணங்குதல் வேண்டும். வடக்கே அல்லது கிழக்கே தலை வைத்து வணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் முறை

அட்டாங்க நமஸ்காரம்: எட்டு அங்கங்கள் நிலத்திற்பட வணங்குதல், தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்களிரண்டு என்பனவே அட்டாங்கம் என்னும் எட்டு உறுப்புக்களாகும். பூமியில் மார்புபடும் படி வலக்கை முன்னும் இடக்கை பின்னும் நீட்டிப் புயங்கள் மண்ணிற் பொருந்தும்படி செய்தும் வலக்காது முதலும் இடக்காது பின்னருமாக நிலத்திற் பொருந்தச் செய்து, சிரசை நிலத்தில் பொருந்தவைத்தும் வணங்கவேண்டும்.

பஞ்சாங்க நமஸ்காரம்: பஞ்சாங்க நமஸ்காரம் என்பது ஐந்து உறுப்புக்கள் நிலத்தில் பட வணங்குவது. தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்பனவே பஞ்சாங்கம் என்னும் ஐந்து உறுப்புக்களாகும்.

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. ஐந்தாங்குரவர் ஆகிய ஆறுமுகநாவலர் அவர்கள் வழிபடும் முறை பற்றிக் கூறும்போது பலிபீடத்திற்கு இப்பால் மட்டுமே வீழ்ந்து வணங்குவது பற்றிப் குறிப்பிடுகின்றார்.

உள்ளே நுழைந்து வீதிவலம் வரும் போது சுவாமி சந்நிதிகளில் தனித்தனியே ஒவ்வோரிடத்திலும் விழ்ந்து வணங்குவது உகந்ததன்று. அங்கே நாம் வீழ்ந்து வணங்கினால் நாம் கால் நீட்டும் திசையில் இன்னொரு சந்நிதானம் இருக்கும். வழிபடுகின்ற மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கும் அதனால் குறித்த இடம் தவிர மற்ற இடங்களில் வீழ்ந்து வணங்குவதைத் தவிர்க்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சுவாமி திருவுருவங்களைத் தொட்டு வணங்குதல், கருவறையின் சுவர்களில் தலையை முட்டிக்கொள்ளுதல் போன்றவையெல்லாம் அநாவசியமான பழக்கங்கள். கண்ட இடங்களிலெல்லாம் கற்பூரம் ஏற்றி வழிபடுதல் ஆகாது. அதற்குரிய இடத்தில் மட்டுமே ஏற்றவேண்டும்.

நாமே இறைவனை அர்ச்சிக்க வேண்டும் என்னும் ஆவலால் உந்தப்பட்டுத் தெய்வ சந்நிதானங்களிற் பூக்கள் எறிந்து வழிபடுதலும் ஆகாது. அது நமக்குத் தகுதியான ஒரு செயலன்று என்பதோடு அம் மலர்கள் பின்னர் அடியார்களின் காலிற்படும் போது இருவருக்கும் சாபம் ஏற்படுகிறது. (மலரிட்டு வணங்கும் விருப்பு உடையவர்கள் தமது வீட்டிலே சுவாமி அறையிலே சுவாமிப்படங்களின் முன் விளக்கேற்றி மலரிட்டு வழிபடுவது வரவேற்கத்தக்கது)

வீழ்ந்து வணங்கி பிறகு நந்தியெம் பெருமானிடம் (இடபதேவர்) அனுமதிபெற்ற பின் உள்வீதி வலம் வந்து வணங்க வேண்டும். விநாயகப் பெருமான் சந்நிதியில் நெற்றியில் மும்முறை குட்டி, கைகளை மாறி வலக்கையால் இடக் காதையும், இடக் கையால் வலக்காதையும் பிடித்துக் கொண்டு மும்முறை இருந்து எழும்பி (தோப்புக்கரணம்) வணங்க வேண்டும்.

வீதிவலம் வந்த பின் உள்ளே சென்று ஸ்நபன மண்டபத்தில் நின்றவாறு மூலவரை வணங்க வேண்டும். வீதிவலம் வரும்போதும் வணங்கும்போதும் சிவநாமங்களை உச்சரித்தலும் திருமுறைப் பாடல்களைப் பாடுதலும் நன்று.

பொதுவாக ஆலயத்தினுள் வீண் வார்த்தை பேசுதலும், வேறு சிந்தனைகளில் ஈடுபடுதலும் ஆகாது. ஆலயத்தையும் அதன் சூழலையும், எப்போதும் அமைதியாகவும், தூய்மையாகவும் வைத்திருத்தல் அவசியம். சூழலிற் சக்தியை மேம்படுத்த அமைக்கப்பட்ட ஆலயங்கள் சூழலை மாசுபடுத்தும் வகையில் நாம் நடந்துகொள்ளக் கூடாது.

ஆலயத்தினுள் நந்திக்கும் மூலவருக்கும்மிடையே குறுக்கே செல்லலாகாது. சண்டேஸ்வரர் சந்நிதிக்கும் மூலஸ்தானத்துக்கும் இடையிற் போவதும் ஆகாது. இதனால் சண்டேஸ்வரரை வலம் வரலாகாது.

இறை தரிசனமும், வழிபாடும் முடிந்த பின் சண்டேஸ்வரர் சந்நிதிக்குச் சென்று மிக மெதுவாக மும்முறை கைகொட்டி, இறை வழிபாட்டின் பலனைத் தரும்படி அவரை வணங்க வேண்டும்.

சிவபக்தியில் மிகவும் மேம்பட்டவரான சண்டேஸ்வரை, வழிபாட்டின் பலனை வழங்கும் பதவியில் அமர்த்தியிருக்கிறார் சிவபிரான். சண்டேஸ்வரர் எப்போதும் சிவத்தியானத்தில் இருப்பர். அதனால் அவரைக் குழப்பாது மெதுவாக அவர் கவனத்தை நம்மீது ஈர்க்கும் வகையில் மெதுவாகக் கைகொட்டி வணங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் ஆலயத்தில் அமைதியான ஒருபுறத்தில், தியானத்தில் ஈடுபட வேண்டும். அதன் பின் பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டு நிறைவோடும் மகிழ்வோடும் திரும்பலாம்.

**கிரியைகள்- நித்தியக் கிரியைகள்**

இக்கிரியைகளில் முக்கிய அம்சங்களிற் சில உண்டு. இறை திருவுருவத்தை நீராட்டுதல் அபிஷேகம் எனப்படும். அதனைக் துடைத்து ஆடை, அணிகலங்கள் அணிவித்தல் அலங்காரம், வாசனைத் தூபம் காட்டுதல் அதன் பின் இறைவனுக்காகப் புனிதமாக மடப்பள்ளியில் தயாரான திருவமுதைப் படைத்து நிவேதனம் செய்வித்தல். அமுது செய்வித்தல் எனவும் இதைக் கூறுவதுண்டு. எனினும் உண்மையில் நிவேதனம் என்ற சொல் பரந்து விரிந்த பொருளையுடையது.

நிவேதனம் என்ற சொல்லின் மேற்பொருள் அறிவிப்பு ஆகும். நாளாந்த உணவை எமக்கு வழங்குபவன் இறைவன். அதனால் அதனை அவன் முன் படைத்து அவனுக்கு எமது நன்றியறிதலை அறிவிப்பதே இக்கிரியையின் நோக்கம்.

இதன் பிறகு பலவேறு தீபங்கள் இறைவன் முன் காட்டுகின்ற தீபாராதனை நிகழுகின்றது. அதன் பின் நடைபெறும் அர்ச்சனை என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும்.

இறைவனின் பலவேறு பெயர்களையும் சொல்லிப் புகழ்ந்து போற்றி மலர்களை அவன் முன் சொரிந்து வழிபடுதலே அர்ச்சனை ஆகும்.

அர்ச்சனை முடிவிற் பஞ்சரார்த்தி காட்டப்படும் இதே போல் பரிவாரத் தெய்வங்கள் யாவற்றிற்கும் ஆரத்தி நடைபெற்று சண்டேஸ்வரர் பூசையுடன் நிறைவு பெறுகின்றது.

**நைமித்திய கிரியைகள்**

விஷேட விழா நாட்களில் நடைபெறுவது நைமித்தியப் பூசைகளாகும். வழமையான பூசைகளுடன் கும்பம் வைத்து பூஜை செய்து அதனை அபிஷேகம் செய்தல் (இதன் மூலம் தெய்வ சாந்நித்தியம் அதிகரிக்கிறது)

ஓமம் வளர்த்தல், பஞ்சாமிர்தம், பால், தயிர், அசிரிமா, மஞ்சள்மா, சம்பக்கூட்டு, சந்தனம், குங்குமம் இவற்றால் தனித்தனியே அபிஷேகம் செய்தல் (இதனை படிக்கட்டு அபிஷேகம் என்பர்) நூற்றுறெட்டு அல்லது ஆயிரம் நாமங்களால் அர்ச்சனை செய்தல், சங்காபிஷேகம் செய்தல் (நூற்றெட்டு அல்லது ஆயிரத்தெட்டு சங்குகளில் சங்குத் திரவியம் கரைத்த நீரை நிரப்பி வைத்து பூசை செய்தல்), சுவாமி வீதியுலா வருதல், வேதபாராயணம், திருமுறை ஓதுதல், ஆசீர்வாதம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறும். காமியக் கிரியைகளிலும் இத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகளே நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை திருவுருவத்தில் இருக்கும் இறைசக்தி குறைந்து விடாமல் இருக்க மேலும் மேலும் அதிகரிக்க செய்வதற்காகவே கும்பபூசைகள், அபிஷேகங்கள் என்பன நடைபெறுகின்றன. மீண்டும் மீண்டும் இவை நடைபெறுகின்ற போது மூர்த்தியில் இருக்கும் சக்தி மேலும் பொலிவு பெறுகிறது. இதனையே உரு ஏறத் திரு ஏறும் என்று கூறுவர்.

அக்கினி காரியம் அல்லது ஹோமம் நிகழும் போது ஓமகுண்டம் ஒன்றில் அக்கினி வளர்க்கப்படுகின்றது. இந்த அக்கினி சிவாக்கினி என்று அழைக்கப்படுகிறது. அக்கினியை முறைப்படி வளர்த்து அதற்கு வேண்டிய உபசாரங்கள் கொடுத்து அதற்கு காவல் இட்ட பின் நாம் வழிபடும் மூர்த்தி அக்கினியிலே ஆவாகனம் செய்யப்படுகின்றது. அவருக்குரிய மந்திரங்கள் பல கூறி ஆகுதிகள் வழங்கப்படுகின்றன.

இப்போது மூலஸ்தானத்திலே இருக்கும் திருவுருவத்தில் இருக்கும் அதே இறையருட் சக்தியைக் கும்பத்திலும் அக்கினியிலும் எழுந்தருளும் படி செய்திருப்பதால் மூன்று இடங்களிலும் அந்த சக்தி காணப்படுகின்றது. மூல மூர்த்தி பிருதுவியாகிய மண்ணின் அம்சம் (நிலம்) கும்பத்திலிருப்பது நீர் ஓமகுண்டத்திலிருப்பது அக்கினி, இவற்றை சூழ்ந்திருந்து தொடர்புபடுத்துவது காற்று யாவற்றையும் சூழ்ந்திரப்பது ஆகாயம் (பரந்தவெளி).

ஆகாயம் முழுவதும் பரவி நிறைந்திருக்கும் இறைவனை காற்றினூடாக அக்கினியிற் கொண்டு வந்து, அதிலிருந்து கும்பத்திலிருக்கும் நீருக்குக் கொண்டு வந்து பின்னர் அக் கும்பநீரை நிலத்தின் அம்சமான விக்கிரகத்தில் அபிஷேகம் செய்வதன் மூலம் ஒன்று சேர்க்கின்றோம். இவ்வாறு நமது கிரியைகளிற் பிரபஞ்ச மூலப்பொருட்களாகிய பஞ்சபூதங்களும் படிப்படியாக இணைக்கப்படுகின்றன.

**மஹோற்சவம்**

வருடந்தோறும் நிகழும் ஒரு நைமித்திகக் கிரியை மஹோற்சவம் ஆகும். ஸ்தம்ப மண்டபத்திலிருக்கும் கொடித்தம்பத்திலே கொடியேற்றம் நிகழ்த்தப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பத்து அல்லது அதற்கு அதிகமான நாட்கள் தொடர்ந்து திருவிழா நடைபெறும். கொடி மரத்திலும் மூலஸ்தான இறைவனையே ஆவாகனம் செய்து வழிபடுவோம். கொடியேற்று விழாவில் ஆழ்ந்த தத்துவ உட்பொருள் இருக்கிறது. சைவசித்தாந்த அடிப்படை உண்மையை நாம் புரிந்து கொண்டாற்றான் இதனை விளக்கிக் கொள்ளலாம்.

**சைவசித்தாந்தம்**

இப்பிரபஞ்சத்தில் என்றும் உள்ள மூலப்பொருள்கள் மூன்று, பதி, பசு, பாசம் என்பனவே அவை. இவை இறை, உயிர், தளை எனவும் சொல்லப்படும். பதி என்பது தலைவனாகிய இறைவன் (பரமான்மா) பசு என்பது ஆன்மா ஆகிய உயிர், பாசம் என்பது உலகில் நாம் காணும் ஏனைய பொருட்கள், (பாசம் என்பது மலம், ஆன்மாவை மறைத்து நிற்கும் அறியாமை) பதி, பசு, பாசம் எனும் இவற்றை முப்பொருள் என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவாகிய ஆன்மா பாசத்திலிருந்து விலகிப் பதியாகிய ஆண்டவனைச் சென்றடைய வேண்டுமென்பதே சைவசமயத்தின் நோக்கம். அதற்கு இறைவனின் திருவருளே உதவுகின்றது.

**கொடியேற்றத் தத்துவம்**

கொடிமரம்: பதி, கொடிச்சேலை: பசு, (அச்சேலையில் வரையப்பட்டிருக்கும் நந்தி ஆன்மாவை குறிக்கின்றது. நந்தியின் மேல் சிவனின் அடையாளச் சின்னமாகிய சூலம் வரையப்பட்டிருப்பது ஆன்மா இறைவனை சென்றடையும் பக்குவத்தை பெற்றுவிட்டதைக் குறிக்கும்) மஞ்சட்கயிறு: திருவருட்சக்தி, தர்ப்பைக் கயிறு: பாசம். பாசமாகிய தர்ப்பைக்கயிறு, பதி ஆகிய கொடிமரத்தில், பசு ஆகிய கொடிச் சேலை ஏறுவதற்குத் தடையாக இருக்கிறது. ஆனால் திருவருளாகிய மஞ்சட் கயிற்றின் உதவியுடன் கொடிச் சேலை மரத்தில் ஏறிச் செல்லும்போது தர்ப்பக் கயிறு ஒதுங்கிப் பலமிழந்து நிற்கிறது. சீவான்மா படிப்படியாகத் தனது தடைகளை விலக்கித் தகுதிபெற்றுப் பரமாத்மாவுடன் ஐக்கியமாகி விடுவதையே இவ்விழா காட்டுகிறது.

**நந்தியும் பலிபீடமும்**

நாளாந்தம் நாம் ஆலயத்தில் காணும் நந்தியும் பலிபீடமும் கூட இதே தத்துவத்தையே விளக்குகின்றன. நந்தி ஆன்மாவின் குறியீடு அது தான் பாச மலங்களாகிய தடைகளை பலிபீடத்தில் பலியிட்டு அகற்றி விட்டுத் தான் தகுதிபெற்றுப் பதியாகிய இறைவனையே நோக்கிய வண்ணம் இருக்கிறது. இது இறைவனுக்கும் ஆன்மாவுக்குமுரிய நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது. அதனாற்றான் நந்திக்கும் மூலவருக்கும் இடையிற் குறுக்கே போகக் கூடாது என்பர்.

**ஐந்தொழில் விளக்கம்**

இறைவன் நிகழ்த்தும் ஐந்தொழிலிற் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியன மஹோற்சவ விழாவில் உருவகப்படுத்தப்படுகின்றன. கொடியேற்ற விழா படைத்தல் தொழிலைக் குறிக்கும். ஏனெனிற் கொடியேற்றத் திருவிழாவிற் பேரீதாடனம், அங்குரார்ப்பணம் என்னும் கிரியைகள் நடக்கின்றன. இவை ஆக்குதலைக் குறிப்பன. தினமும் வாகனங்களில் இறைவன் வீற்றிருந்து வீதிவலம் வருதல் காத்தல் தொழிலை குறிக்கும். இறைவன் வெளியே வந்து ஆன்மாக்களைக் காப்பதாகக் கருதப்படுகின்றது. மேலும் வாகனங்கள் ஆன்மாவின் குறியீடு வாகனத்தில் திருவுருவம் வீற்றிருப்பது ஆன்மாவில் இறைவனின் திருவருள் பதிவதைக் குறிக்கின்றது. வேட்டைத் திருவிழாவும், தேர்த் திருவிழாவும் அழித்தலைக் குறிக்கும். தீயவற்றை அழித்து நல்லவற்றைக் காத்தல் என்பதை விளக்கவே இவ்விரு விழாக்களும் நடாத்தப்படுகின்றன. தீர்த்தத் திருவிழாவன்று நடைபெறும் சுண்ணமிடித்துச் சாத்துதலும், கொடியிறக்கியதும் நடைபெறும் மௌனோற்சவமும் மறைத்தல் தொழிலைக் குறிப்பன. தீர்த்தத் திருவிழாவும், ஆசார்ய உற்சவம் என்னும் குருவைப் போற்றும் விழாவும் அருளலைக் குறிக்கும். திருவிழா ஆரம்பமாகிறது என்றதும் அந்த ஆலயம் சார்ந்த அனைவருக்கும் ஒரு புத்துணர்வும், எழுச்சியும் ஏற்பட்டுவிடும். ஆலயச் சூழலையும் தத்தமது இல்லங்களையும் சுத்தப்படுத்தித் தூய்மையும், அழகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலியச் செய்கின்றனர். தாமும் தூய உணவுகளை உண்ணுவர். இவற்றாற் குறிப்பிட்ட அக்காலங்களில் அந்தச் சுற்றாடல் முழுவதும் சாத்வீகமான அதிர்வுகளால் நிரம்பப் பெற்று உயர்ந்த சக்திச் சேமிப்பும் உருவாகிறது.

**நிறைவுரை**

இவ்வாறே கும்பாபிஷேகம் போன்ற நைமித்திகக் கிரியைகளிலும் நாம் பல சிறப்புக்களைக் காணலாம். திருவருட் சக்தியைச் சேமித்தல், பெருக்குதல் என்பதோடு கலை, கலாசார நிகழ்வுகள் பலவும் இவற்றோடு இணைகின்றது. சிற்பக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், அலங்காரக் கலைஞர்கள் பலவேறு தொழிலாளர்கள் முதலியோர் சிவாசாரிய அந்தணர்களோடு இணைந்து, ஆலயம் சார்ந்து, தமது வாழ்க்கைப் பாதையை நகர்த்தும் வகையில் ஆன்மீக நலம் சேர்ப்பதோடு, பொருளாதார ஈட்டமும் பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சைவாலயம் என்பது சமுதாய வாழ்க்கையின் குறியீடாக, பொருளாதார மையமாக, கலை கலாசார விழுமியங்களைப் பேணி பாதுகாத்து வளர்த்து அடுத்துவரும் தலைமுறையிடம் கையளிக்கும் நிறுவனமாக, உளவியல் ரீதியான பலத்தையும் பாதுகாப்பையும் பலருக்கு வழங்கும் உயர் நிலையமாக, ஆன்ம விடுதலைக்கான பயிற்சிக்களமாக, பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு விளங்குகின்றது.

**நன்றி: அனலைதீவு எழுவடிவயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாள்**
**தேவஸ்தான இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2012**

**நடேசரபிஷேகம்**

ஆனந்த மயமாக அனவரதமும் ஆடிக்கொண்டிருப்பவர் ஸ்ரீ நடராஜர். பிரபஞ்சத்தை இயக்கும் அந்த நாட்டியத்தால் தான் சகல ஜீவன்களும் தோன்றியது என்கிறது வேதம். ஓயாத அந்த நாட்டியத்தின் காரணமாக, நடராஜப் பெருமானின் அங்கத்தைக் குளிர்விக்க தேவாதிதேவர்களின் ஆறுகால பொழுதுகளில் அபிஷேகம் செய்விக்கப்படுகிறது. மானிடர்களுக்கு ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள். இதனால், ஆறுகால பூஜையை அவர்கள் நாள்தோறும் செய்து வருகிறார்கள். அதன்படி, சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தில் செய்யப்படும் அபிஷேகம், உச்சி கால அபிஷேகம் எனப்படும். அப்போது பால், தயிர், சந்தனம், இளநீர், விபூதி, தேன், பஞ்சாமிர்தம் போன்றவற்றால் குளிரக்குளிர நடராஜத் திருமேனிக்கு அபிஷேகிக்கப்படும். பின்னர், மகா தீபாராதனை செய்விக்கப்பட்டு, நடராஜர் அலங்கரிக்கப்படுவார். ஆண்டுக்கொரு முறை வரும் சித்திரை உச்சி கால அபிஷேகத்தைத் தரிசித்தால், பிறப்பிலா பேரின்ப நிலையை எட்டலாம் என்கிறது ஆன்மீகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் ஓம்புதல்

குமாரசாமி சோமசுந்தரம்

இந்த மனித உடல் மிக அருமையான இயந்திர தொகுதி. ஆழ்ந்து சிந்தித்தால் அதன் அற்புதம் தெளிவாகும். மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரத்தை காண்கிறோம். அவை ஏதாவது சக்தியின் மூலம் இயக்கப்படுகின்றன. அவற்றுக்கு உயிர் உணர்வு கிடையாது. ஆனால் மனித உடல் எனும் இயந்திரம் அமைப்பினுள் உயிர் உள்ளது. அந்த உயிரே மனித உடலுக்கு உயிர்ப்பையும் உணர்வையும் தருகின்றது.

மனித வாழ்க்கைக்கு உயிர்ப்பும் உணர்வும் பொருந்திய உடல் மிக முக்கியமானது. எனவே உடலை இழுக்கு என்று தள்ளிவிட முடியாது. மனித வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதற்கு உடல் கருவியாக விளங்குகின்றது. உலகியல் வாழ்க்கைக்கு அனுகூலங்களையும் ஆத்மீக உணர்வுகளையும் பெறுவதற்கும், அனுபவிப்பதற்கும் உடல் இன்றியமையாததாகும்.

வாழ்க்கையின் இறுதி இலக்காகிய இறைவனை அடைவதற்கும் உயிர்க்கு உடல் உறுதுணையாக விளங்குகின்றது என்பது சமயங்களின் முடிவு ஆகும். இத்தகைய கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை பெற்ற நாம், நமது உடலை நன்கு பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

“சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்” என்பது பண்டுதொட்டு நம் மக்களிடையே வழங்கி வருகின்ற பொருள் பொதிந்த பழமொழியாகும். சுவர்போன்றது மனிதனுடைய உடல். சித்திரம் என்பது ஓர் அழகுக்கலை. எனவே வாழ்க்கைக் கலையும் அழகு மிளிர, ஒழுங்கு தழுவ, செம்மை செறிய, நன்மை பெருக, அமைய வேண்டும் எனில், மனிதர்களின் உடல்களும் ஆரோக்கியமுள்ள வளமும் நலமும் நிறைந்தவையாக இருத்தல் அவசியம் ஆகும்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” நோய் தொற்றுவது, பற்றுவது உடலைத்தான் உயிரை அல்ல. நோய்வாய்ப்பட்ட உடல் ஆரோக்கியத்தை இழக்கிறது. உடலின் பலமும் நலமும் பறிபோய்விடுகின்றன. விவேகமும் உணர்வும் குன்றி விடுகின்றன. உடல் நலிவுறச்செய்து விடுகின்றது. எத்தனை கோடி செல்வங்கள் இருப்பினும் இன்பங்கள் கிடைப்பினும் ஒருவனின் உடலை பற்றிஉள்ள கொடிய நோய் அத்தனை செல்வங்களையும் இன்பங்களையும் அனுபவிக்க முடியாமல் அவனை தடுத்துவிடுகிறது. எனவே ஆரோக்கிய வறுமை மற்ற எல்லா வறுமையைக் காட்டிலும் கொடியது.

“உடம்பார் அழியில் உயிரார் அழிவார்” மேலும், “திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்”, எனத்தொடர்ந்து, “உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே” எனத்தமது அனுபவத்தையும் உடல் நலம் பேணுதலின் அத்தியாவசியத்தையும், திருமந்திர நூல் வாயிலாக, நமக்கு வழங்குகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் நலம் குன்றியவர்கள், மிக இலகுவில் உணர்ச்சி வயப்படுகிறார்கள். பிறர் மீது கோபம் கொள்கிறார்கள், எரிந்து விழுகிறார்கள். பொறாமை, எரிச்சல், வெகுளி, இன்னாச்சொல் என்பன அவர்களை விட்டுப் பிரிவதில்லை. உண்மையில் உடல் ஆரோக்கியத்தை இழந்தவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்கள். அவர்கள் மீது மற்றையோர் கருணை காண்பிக்க வேண்டியது அவசியம். ஆனால் அவற்றையெல்லாம் ஏற்கும் நிலையில் அவர்கள் இல்லை. மனித வர்க்கத்தையே வெறுக்கும் நிலையில் அவர்கள் உள்ளனர்.

உடல் ஆரோக்கியம் குன்றுவதற்கும், கொடிய தீராத நோய்களுக்கு உட்படுவதற்கும் செவ்வையாக இளம்பராயத்தில் இருந்து உடல் ஓம்பல் இல்லாமையே பெரும்பாலும் காரணமாகின்றது. உணவு, உடற்பயிற்சி, ஓய்வு, பழக்கவழக்கங்கள், இயற்கையோடு இணைந்த வாழ்வு ஆகியவற்றில் ஒரு சீரான அளவு, ஒழுங்கான முறையில் கடைப்பிடித்து வருபவர்களுக்கு ஆரோக்கியம் குன்றுவதில்லை.

உடல் நலம், உடல் ஆரோக்கியத்தை பொறுத்தவரை “வருமுன் காக்க” எனும் தாரக மந்திரத்தை உபாசிப்பவர்கள் ஆக மனிதர்கள் விளங்க வேண்டும். அப்போதுதான் உடல்நல சீரழிவிலிருந்து மனித இனம் காப்பாற்றப்பட முடியும்.

இன்று இளம் சந்ததியினர் பெரும்பலானவர்களிடம் புகைத்தல், மது அருந்துதல், போதைப்பொருள் பாவனை, இயற்கைக்கு விரோதமான வாழ்க்கை, இரவில் நீண்ட நேரம் கண்விழித்தல், பிறள்வான ஒழுக்கம் என்பன பரவலாக காணப்படுகின்றன. மாணவப் பருவத்தினரையும் இவை விட்டுவைக்கவில்லை இன்னமும் உழைத்து, சம்பாதிக்காத நிலையில் உள்ள சிறுவர்களும் இவ்வாறு உல்லாசமாக உடல்நலத்தை கெடுத்துக்கொள்வதற்கு யார் காரணம்?

பிள்ளைகள் பணத்தை கேட்கும்போதெல்லாம் வகை தொகை இன்றி வாரி வழங்கும் பெற்றோர்களும், உறவினர்களும் இதற்குரிய பொறுப்பினை ஏற்க வேண்டியவர்களாக உள்ளனர். வஞ்சகம் அறியாத பிஞ்சு உள்ளங்களை, கொண்ட சிறுவர்கள் நாளைய தலைவர்கள். அவர்கள் சீராகவும் செம்மையாகவும் வளர்க்கப்பட வேண்டியவர்கள். தாம் வாழ்ந்து காட்டவேண்டும்.

துர்பழக்கங்களுக்கு உள்ளாகி, பிஞ்சிலேயே பழுத்து இளமையிலேயே முதுமையும் மூப்பும் கண்டு சீரழிவுக்குள் சிக்காது, அவர்களை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோர் உள்ளிட்ட அனைவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து செயற்படுவோமாக. இந்த உடல், உலகியல் வாழ்க்கைக்கும், ஆன்மீக வாழ்வுக்கும் இன்றியமையாதது. நாம் உடல் நலம்பேணி, ஆரோக்கியமாக வாழ்ந்தால்தான், நம் வாழ்வு சிறக்கிறது, ஏனையோருக்கும் சுவை தருகிறது, அல்லது வாழ்வு சுமையாகி விடுகிறது. நாம் நமக்கும் மற்றையோருக்கும் சுமையாக இருப்பதை தவிர்ப்பதற்கு உடல்நலம் நன்கு ஓம்படவேண்டியது இன்றியமையாததாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீர்வேலி கந்தசுவாமி கோயில் பழைய நினைவுகள்

செஞ்சொற்செல்வர்,
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்.

பழமையும் பெருமையும் வாய்ந்த நீர்வேலி கந்தசுவாமி கோயில் சிறப்புகள் பற்றி எடுத்துரைப்பதில் ஆனந்தமடைகின்றேன். என் தந்தைவழி குலதெய்வமாகிய கந்தப்பெருமான் எழுந்தருளியிருக்கும் நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் எங்கள் குடும்பத்தவர்களின் வாழ்வில் தலையாய திருகோயிலாக இன்றும் விளங்குகிறது. இவ் ஆலயம் மிகப்பழமை வாய்ந்த வரலாறு கொண்டது.

நீர்வேலி கிராமத்தில் வாழ்ந்த மக்கள் சைவப்பாரம்பரியம் மிக்கவர்கள். அந்நியர் ஆட்சிக் காலத்தின் போது நீர்வேலி வாழ் மக்களை மதம் மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் படுதோல்வியடைந்தன. நீர்வேலி கோப்பாய் எல்லைப் பகுதிகளில் தேவாலயங்களை நிறுவி மதம் மாற்றும் முயற்சிகள் நடைபெற்ற போது நீர்வேலியைச் சேர்ந்த மக்கள் எவருமே மதம் மாறவில்லை. இலவசமாக ஆங்கிலக்கல்வி வழங்கப்படும் என கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அறைகூவல் விடுத்தபோது நீர்வேலி வாழ் மக்கள் மதம் மாறிக் கற்பதற்கு விரும்பவில்லை. அந்தளவுக்கு சமயப் பண்பாட்டில் நெறி பிறழாமல் வாழ்ந்துள்ளனர்.

நீர்வேலியில் திண்ணைப் பாடசாலைகள் சில அறிஞர்களால் தமது வளவுக்குள் நடாத்தப்பட்டு வந்தது. இந்த திண்ணைப் பாடசாலைகளில் பண்டிதர்கள், புலவர்கள் பலர் கற்பித்து வந்தனர். நல்லைநகர் நாவலர் பெருமான் தனது மூன்றாவது பாடசாலையை கோப்பாய் கிராமத்தில் ஆரம்பித்தபோது நீர்வேலி சைவமக்கள் அப்பாடசாலையிலேயே தமது கல்வியைத் தொடர்ந்தனர்.



நாவலர் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை இடைமறித்து கிறிஸ்தவக் கல்லூரி நிர்வாகம், தமது பாடசாலைக்கு வருகை தந்தால் மலேசியாவில் உத்தியோகம் கிடைக்கும் என பிரசாரம் செய்தனராம். அவ்வேளையிலும் நீர்வேலி வாழ் மக்கள் தங்கள் குல தெய்வமாகிய கந்தப்பெருமானை அடிப்படையாகக் கொண்டு மாற்று மதத்தவர்களின் வார்த்தைகளை நிராகரித்து வாழ்ந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமான் காலத்தில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் புராணப்படிப்பு பாரம்பரியம் சிறப்புற்று விளங்கியது. நாவலரது வேண்டுகோளை ஏற்று சைவக்கல்லூரிகள் உருவாக்கப்பட்டபோது அத்தியார் என்ற பெருமகன் நீர்வேலியில் இந்துக்கல்லூரியை ஸ்தாபித்தார். அத்தியார் இந்துக்கல்லூரி உருவாக்குவதற்கு முன் நீர்வேலி பிள்ளைகளின் ஏடு தொடக்கப்படும் இடமாகவும், உபாத்தியாயர்கள் கல்வி போதிக்கும் இடமாகவும் நீர்வேலி கந்தசுவாமி கோயிலும், கோயிலுக்கு முன்பாக அமைந்திருந்த மடமும் விளங்கியது. ஆதலால் அறிவை வளர்த்த ஆலயமாக இது சிறப்புப் பெறுகிறது.

1800களின் பிற்பகுதியில் நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் கந்தபுராணப்படிப்பு ஆரம்பமாகி விட்டது. இதனைக் கேட்பதற்கு பெரும் அடியார் கூட்டம் ஆலயத்தில் சேருமாம். கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு கோயிலில் சில தைரியசாலிகள் கடமையாற்றுவார்களாம். அவர்கள் கையில் வைத்திருக்கும் சால்வையால் சத்தம் போடாமல் அடியார்கள் கேட்கவேண்டும் என சுற்றிவந்து எச்சரிக்கை செய்வார்களாம். இக் காட்சியை தன் கண்ணாரக்கண்டு அனுபவித்ததை என் தந்தையார் தனது சிறுபராய கோயில் அனுபவம் பற்றி சொல்லும்போது கேட்டிருக்கிறேன்.

நீர்வேலி கந்தசுவாமி ஆலயம் ஆரம்பத்தில் வேல் வழிபாட்டு மரபிலேயே இருந்தது என்று சொல்லப்படுகின்றது. தங்களது மூதாதையர் தென்மராட்சிக்கு நெல் வாங்கப் போனபோது, அங்கிருந்த நெல் பெட்டகத்தில் வள்ளி தெய்வயானை சமேத முருகப்பெருமான் விக்கிரகத்தைக் கண்டதாகவும், இது பற்றி கேட்டபோது “எங்கள் ஊர் கோயிலுக்காக இந்தியாவிலிருந்து விக்கிரகத்தைக் கொண்டு வந்தோம். சில தடங்கல்களால் பெட்டகத்தில் வைத்து பராமரித்து வருகிறோம்” என்று நெல் விற்பனையில் ஈடுபட்டிருந்தவர்கள் பதில் சொன்னதாகவும் ஒரு தகவல் தங்களது முன்னோர்களால் தெரிவிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. தென்மராட்சிக்கு நெல்வாங்கப் போனவர்களுக்கு முருகப்பெருமான் மறுநாள் கனவில் தோன்றி “என்னை வந்து கொண்டுபோங்கள்” என சொன்னதாகவும், அதனால் அவர்கள் தென்மராட்சிக்கு சென்று பணம் கொடுத்து விக்கிரகங்களைப் பெற்று தலையில் வைத்து சுமந்துகொண்டு வந்ததாகவும், வரும் வழியில் கோப்பாய் பராம்பற்றை இலுப்பையடி பிள்ளையார் குடிசையில் இருந்தார் என்றும், அக்குடிசைக்கு அருகில் இளைப்பாறிச் சென்றதாகவும் ஒரு வாய்மொழி மரபாக வரலாறு சொல்லப்படுகின்றது.

கொண்டு வரப்பட்ட விக்கிரகங்களை கருவறையிலே பிரதிஷ்டை செய்த பின்பு, இத்திருக்கோயில் பெருங்கோயிலாக மாறியதாக பலரும் சொல்லி வருகிறார்கள். நீர்வேலி கந்தன் வருடந்தோறும் வேட்டைத் திருவிழாவின்போது கோப்பாய் தரவைக்குச் சென்று இலுப்பையடி பிள்ளையார் கோயிலில் இளைப்பாறி வரும் வழக்கம் பல காலமாகவே இடம்பெற்று வருகிறது. அன்று தென்மராட்சியிலிருந்து விக்கிரகங்களைக் கொண்டு வந்தபோது இளைப்பாறிய காரணத்தால் அந்தப் பாரம்பரியம் இன்றும் பேணப்படுகிறது. நீர்வேலி கந்தப்பெருமான் வேட்டைத் திருவிழாவின் போது இலுப்பையடி பிள்ளையார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்கு வந்து திரும்பும்போது எங்கள் பரம்பரையினரே முதலாவது மண்டகப்படி அமைத்தனர். யானும் சிறுவனாக அந்த மண்டகப்படியில் கலந்து கொண்ட நினைவுகள் என்றும் மறக்க முடியாதவை.

ஆரம்பகால புராணப் படிப்பின்போது என் தந்தை வழி பேரனார் பண்டிதர் வி. வேலுப்பிள்ளை பெரும் பங்களிப்பச் செய்திருக்கிறார். இவர் சைவசித்தாந்தத்தில், புராண படிப்பிலும் சிவசங்கர பண்டிதர் போல மிகுந்த ஆற்றலுடையவராக விளங்கியவர். இவர் கோப்பாயில் திண்ணைப் பாடசாலை அமைத்து கல்வி போதித்தவர். இவரே ஈழத்தில் முதன் முதலாக 1895 ஆம் ஆண்டு முப்பால் நூல் சர்க்கம் என்ற நூலை வெளியிட்டவர் என்பது வரலாறு. இவர் ஆரம்பத்தில் நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்திற்கு சமீபமாக வசித்தவர். இவரிடம் கல்வி கற்றவர்கள் பிற்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கினார்கள். அச்சுவேலி சிவஸ்ரீ. குமாரசாமிக் குருக்கள் இவரிடம் சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெறுவதற்காக காலநடையாக வந்து சென்றதாக என் தந்தையார் குறிப்பிடுவார். இவர்களைப் போன்றவர்கள் நீர்வேலியில் செல்வாக்குடன் விளங்கிய காலத்தில் சேர். பொன். இராமநாதன் போன்ற பிரமுகர்கள் ஆலயத்திற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

நீர்வேலி கந்தப்பெருமானுடைய சித்திரா பௌர்ணமியை அடிப்படையாகக் கொண்ட திருவிழா யாழ் குடாநாட்டில் பெருமையாகப் பேசப்பட்டுள்ளது.சில பாரம் பரியங்கள் அங்கு பின்பற்றப்பட்டன. கந்தபுராணப் படிப்பு நடாத்தி, பிடியரிசி பெற்று அன்னதானப் பூசை முடித்தே ஆலயத்துக்கு திருவிழா பந்தல்கால் நடும் வழக்கம் இருந்தது. பந்தல்கால் நடும் வைபவத்தின்போது பெரும் கூட்டம் கூடிவிடுமாம். தீவட்டிகள் கொளுத்தி, முழுப் பனையளவு உயர்த்திற்கு வைரப் பனந்தடியை பட்டுக்கட்டி பந்தல் காலை நிறுத்துவார்களாம். நூறு, இருநூறு என இளைஞர்கள் ஒன்றிணைந்து முருகா முருகா என ஒசையெழுப்பி பந்தல் காலை நிமிர்த்துவார்களாம். பந்தல்கால் நிமிர்ந்த பின்பு ஆலய வரவேற்பு கொட்டகை அமைக்கும் பணி ஆரம்பமாகும். மிகப் பிரமாண்டமான பந்தல் ஆண்டுதோறும் அமைக்கப்படும். அப்பந்தலில் மக்கள் பெருங்கூட்டமாகவிருந்து வழிபாடு செய்வர். நாகபடப்பந்தல் வேறெங்கும் இல்லாத வகையில் அமைக்கப்படுவது வழக்கம். வைரப்பனை மரங்களால் நாகபாம்பின் தலைபோல பந்தல் முகப்பை உருவாக்கி சுற்றிவர தாழங்காய்களால் அலங்காரம் செய்யப்படுமாம். இந்த விசித்திரமான பந்தலைப் பார்ப்பதற்கு வல்வெட்டித்துறை, வரணி, அளவெட்டி, சுன்னாகம் போன்ற ஊர்களிலிருந்து பலர் மாட்டு வண்டிகளில் வருகை தருவார்கள். இப் பந்தல்களைப் பார்ப்பவர்கள் இதுபோன்று தங்கள் ஊரிலுள்ள ஆலயங்களில் திருவிழாவின் போதும் அமைப்பது வழக்கம். எனினும் முழுமையான நாகபடப்பந்தலை எல்லோராலும் அமைத்து விட முடிவதில்லை. இப்பந்தல் நிர்மாணப் பணியில் ஈடுபட்டவர்களில் ஒருவரான எனது பெரிய தந்தை திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி (சின்னண்ணை) இதுபற்றி அற்புதமாக தன் முதுமைக் காலத்தில் சொல்லிக்கொணடேயிருந்தார். இங்கு விடிய விடிய திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம். இவை பற்றியும் பல முதியவர்கள் சுவையான செய்திகளை சொல்லி மகிழ்வார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகப்பெரிய மயில்வாகனம் நீர்வேலி கந்தப்பெருமானுக்கு இருந்தது. இந்த மயில் வாகனத்தில் சண்முகப் பெருமானை இருத்தி காவுவதற்கு தனித்தைரியம் வேண்டும். அந்தக் காலத்தில் ஆலய வீதியில் நான்கு மணிநேரம் சுவாமியை மயில் வாகனத்துடன் தோளில் வைத்தபடி பக்தர்கள் வலம் வருவார்களாம். மேளக்கச்சேரி, சின்னமேளம், வாணவேடிக்கை, தீப்பந்தாட்டம், கரகாட்டம் எனபன வீதிகளில் நடைபெற்று சூரிய ஒளி வருவதற்கு ஆயத்தமாகும் வேளையிலேயே சுவாமி இருப்பிடம் வந்து சேருமாம். இவ்வேளைகளில் முகமூடி அணிந்து வேடம் தாங்கி வேடிக்கை நிகழ்ச்சிகள் நடத்தும் வழக்கமும் இருந்ததாம்.

இந்த நிலைமையை மாற்றி, திருக்கோயிலை பண்பாட்டு பாரம்பரியத்தின் கீழ் கொண்டு வருவதற்கு பலர் முயற்சி செய்தனர். அறுபதுகளில் அம்முயற்சி வெற்றியளித்தது. அறுபதுகளில் பின் பண்டிதர்கள், தலைமை ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், தொழில்துறையில் வல்லவர்கள் என பலர் ஆலய நிர்வாக சபையில் அங்கம் வகிக்கத் தொடங்கினர். நிர்வாகத்தில் பலர் ஆசிரியர்களாக விளங்கினர். இவர்களது வார்த்தைகளுக்கு இளைஞர்கள் கட்டுப்பட்டனர். ஆலயத் திருவிழாவின் போது வாண வேடிக்கை, சின்ன மேளம் போன்ற நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன. இக்காலத்தில் வாகீசக லாநிதி கி. வா. ஜகந்நாதன் யாழ். விஜயத்தின் போது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. இராஜேந்திரக் குருக்களின் இல்லத்தில் தங்கி இருந்ததினால் அறிவு சார்ந்த பண்பாட்டு மறுமலர்ச்சி ஆலயத்தில் உருவானது.


வாகீச கலாநிதி நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இறுதியாக உரையாற்றிய காலப்பகுதியில் அவரது உரையைக் கேட்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அவர் உரையை ஆரம்பிக்கும் போது, இங்கு உரையாற்றுவதற்கு எனக்கு அச்சமாக உள்ளது. கந்தபுராணத்தை, சைவசிந்தாந்தத்தை கரைத்துக் குடித்தவர்கள் இச்சபையின் முன்னால் இருக்கின்றார்கள். அறிவுப் பெட்டகமாகிய இராஜேந்திரக் குருக்கள் அருகில் இருக்கிறார். என்று அவையடக்கமாக சொல்வார். பலவூர் அறிஞர்களும் அவர் உரையைக் கேட்பதற்கு மண்டபத்தில் காத்திருப்பர். மாந்தோல் இருக்கையிலிருந்து அப்பெருமகன் இருமணி நேரத்திற்குமேல் ஆற்றிய உரை பசுமையாக உள்ளது. நன்றியுரை சொல்லவந்த ஸ்ரீமான் முத்துவேலு **(R.D.O)** நகைச்சுவையாக, வாகீச கலாநிதியின் முற்பிறப்பு நீர்வேலியாகத்தான் இருக்கும் என சொன்னபோது மக்கள் ஆரவாரம் செய்தனர். *1985, 1986* ஆம் ஆண்டு காலப்பகுதியில் கம்பன் விழாவுக்காக வருகை தந்த பேராசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களும் நீர்வேலியில் ஆற்றிய உரை மறக்கமுடியாதது.

*1966*ஆம் ஆண்டு முதல் *1983* வரையில் ஆலயத்தில் இடம் பெற்று வந்த எங்கள் குடும்பத்தினரின் ஒன்பதாம் திருவிழாவுக்கு பெரும்பாலும் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் உரையாற்றுவது வழக்கம் ஒன்பதாம் திருவிழா என்றால் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வருவார் என எதிர்பார்த்து பல ஊர்களிலுமிருந்து உரைகேட்க பலர் வருவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்கவி விநாசித்தம்பி புலவர் எனது தந்தையாருடன் ஆசிரிய கலாசாலையில் சமகாலத்தில் கற்ற காரணத்தினால், அவரை பல தடவைகள் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் கதாப்பிரசங்கம் செய்ய தந்தையார் அழைத்திருக்கிறார். தன்னோடு ஆசிரியராகப் பணியாற்றிய திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களை 1967 ஆம் ஆண்டு முதன் முதலாக வில்லிசை நிகழ்ச்சிக்காக அழைத்து அரங்கேற்றினார். திரு. ஆறுமுகம் அவர்களுடன் துணைக் கலைஞராக வருகை தந்த திரு. கணபதிப்பிள்ளை (சின்னமணி) பின்பு பிரபல்யம் பெற்றார். அதன்பின் நூறு தடவைகளுக்கு மேல் நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் அவரது நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.



இங்கு இந்திய தவில், நாதஸ்வர வித்துவான்களின் நிகழ்ச்சிகள் முன்பு ஆண்டுதோறும் இடம் பெற்று வந்தது. குமுக்கா கணபதி என்ற வித்துவான் நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் நிரந்தரமாக தங்கியிருந்து நிகழ்ச்சி வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. கார்த்திகேசு அப்பு என அழைக்கப்படும் எனது உறவினரொருவர் இந்தியா சென்று மங்கள வாத்தியக் கலைஞர்களை நீர்வேலி கந்தசுவாமி கோயில் திருவிழாக்காக அழைத்து வந்து, அவர்களை ஆலயத்தில் தங்கவைத்து, பின்பு வேறு கோயில்களுக்கும் அனுப்பி நிகழ்ச்சிகளை நடாத்திவிட்டு, புரட்டாதி மாதமளவில் திருப்பி அனுப்புவது வழக்கம். இதனால் ஏற்பட்ட செலவுகளுக்காக அவர் தனது சொந்த நிலங்கள் பலவற்றை விற்பனை செய்தார் என எமது உறவினர்கள் இன்றும் கூறுவார்கள்.

நீர்வேலி கந்தசுவாமி ஆலய திருவிழாவை நினைக்கும் போது பசுமையான நினைவுகள் பல அகத்தில் வந்து போகிறது. இன்று ஆலயம் அழகாகக் காட்சியளிக்கிறது. ஆலயத்தை நிர்வாகம் செய்பவர்கள் நல்ல வண்ணம் வழிநடத்தி வருகிறார்கள். வணக்கத்துக்குரிய இ. சுவாமிநாதக் குருக்கள் தனது கடமைகளை சிறப்பாக ஆற்றி வருகிறார்கள். எனது தந்தையார் ஆலய நிர்வாக சபையில் பல வருடங்கள் உறுப்பினராக கடமையாற்றியிருக்கிறார் என்றும் எம் வாழ்வில் நீர்வைக் கந்தன் ஆலயமும், அச் சூழலும் மறக்க முடியாத நினைவுகளாக இருக்கின்றன.

**நன்றி: நீர்வேலி கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேக மலர் - 2018**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி விசாகம்

வி. விதுஜா,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

வசந்தகாலம் எனப்படும் இளவேனிற்காலத்தின் பிற்பகுதியே வைகாசி மாதம் என கருதப்படுகின்றது. வைகாசி விசாகம் என்பது அசுரர்களை அழிக்க சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து அக்னி ரூபமாக முருகக் கடவுள் அவதாரம் செய்த நாளாகும். விசாக நட்சத்திரம் என்பது ஆறு நட்சத்திரங்களின் கூட்டமாகும். இதனால் முருகனும் ஆறு முகங்களோடு திகழ்பவர் என்பது ஐதீகம். விசாக நட்சத்திரத்தில் முருகப்பெருமான் பிறந்ததால் அவருக்கு விசாகன் என்று பெயர். வி என்றால் பறவை (மயில்), சாகன் என்றால் பயணம் செய்பவர் என்று பொருள்படும். அதாவது மயில் மீது பயணம் செய்பவர் என பொருள்படும். ஆறுமுகன் அவதரித்தது இந்த பௌர்ணமியுடன் கூடி வரக்கூடிய வைகாசி விசாக நட்சத்திரம் ஆகும். இந்த அற்புத வைகாசி விசாக தினம் ஆறுமுகன் அவதரித்த நாளாக கொண்டாடப்படும் அதே வேளை எமதர்ம ராஜனின் அவதார தினமாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் இத்தினத்தில் வழிபாடு செய்தால் முருகனருளும் நீண்ட ஆயுளும் பெறலாம். மகாபாரதத்தின் வில் வித்தகனான அருச்சுனன் சிவனிடமிருந்து பாசுபத ஆயுதத்தை வரமாக பெற்ற நாளும் இந்நாளே. புத்த பெருமான் பிறந்ததும் ஞானம் பெற்றதும் இந்த வைகாசி விசாகத்திலேயே ஆகும். இந்நாளிலேயே பன்னிரு ஆழ்வார்களில் முக்கியமான நம்மாழ்வார் பிறந்தார்.

இந் நாளானது வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்துடன் கூடிய சிறப்பு நாளாகும். இந்நாள் சோதி நாள் எனவும் அழைக்கப்படுவதுண்டு. உயிர்களுக்கு நேரும் இன்னலை நீக்கும் பொருட்டு சிவன் ஆறுமுகங்களாய் தோன்றி தம் திருவிளையாடலால் குழந்தையானது இந்நாளிலே ஆகும். மக்கள், தாவரங்கள் எல்லாம் ஒருயிராகி இணைக்கப்பட்டிருக்கும் உண்மையை விளக்குதலே இதன் கருத்தாகும். இதனால் சைவர்கள் இந்நாளில் விரதமிருந்து ஆலயங்களில் சிறப்பாகக் கொண்டாடுவர். முருகன் அவதரித்த வைகாசி விசாக தினத்தில் பிறப்பவர்கள் அறிவு கூர்மையுடன், பல புகழ்களை அடைவார்கள் என்பது நம்பிக்கை. கந்தனுக்கு எத்தனை விழாக்கள் எடுத்தாலும், வைகாசி விசாக விழாதான் வளர்ச்சியைக் கொடுக்கும் விழாவாக அமைகின்றது. விசாக நட்சத்திரத்தன்று முருகப்பெருமானை தரிசித்தால் வெற்றி கிடைக்கும் விரும்பியது நடக்கும். லட்சியங்கள் நிறைவேறும். இந் நாள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந் நாளில் விநாயகரை வழிபட்டு முருகனின் படத்தை பூஜை அறையில் வைத்து கந்தப் பெருமானை உள்ளத்திலும், இல்லத்திலும் நினைத்து வழிபட்டு வரலாம்.

கார்த்திகை, பூசம், விசாகம் முருகனுக்கு உகந்த நட்சத்திரம். வைகாசி விசாக தினத்தன்று வேலனை வழிபட்டால் வெற்றிகள் வந்து சேரும். ஒருவருக்கு தீராத மன துயரத்தை தருவது கடன், நோய், எதிரிகள் பிரச்சினைதான். இந்த மூன்றும் இருந்தால் வாழ்நாளிலேயே சரகும் நிலைக்கு கொண்டு போய் விட்டு விடும் தீராத மன உளைச்சலை தரும். வைகாசி விசாகம் விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவர்களுக்கு தீராத நோய்கள் தீரும், எதிரிகள் தொல்லை அகலும், கடன் பிரச்சினைகள் தீரும். திருமணமாகி நீண்ட நாட்கள் குழந்தை இல்லாத தம்பதிகள் விசாகத்தில் விரதம் இருந்து முருகனை மனதார வணங்கினால் அடுத்த வைகாசி விசாகத்திற்குள் புத்திரபாக்கியம் கிடைத்து விடும் என்பது நம்பிக்கை. முருகப் பெருமானுக்கு விரதமிருந்து மனமுருகி வேண்டிக் கொண்டால் வேண்டிய வரம் கிடைக்கும், ஞானமும், கல்வியும் பெருகும். அல்லல்கள் தீரும், எதிரிகள் பயம் அகலும், தீராத நோய்கள் தீரும், குடும்ப உறுப்பினர்களிடையே இருந்த பகை விலகி பாசம் பெருகும். துன்பங்களும் துயரங்களும் நீங்கும். குழந்தை இல்லாதவர்கள் வைகாசி விசாகம் அன்று பால், பழம் மட்டும் சாப்பிட்டு விரதமிருந்து முருகன் கோவிலுக்கு சென்று வேண்டிக் கொண்டால் அடுத்த வருடம் வைகாசி விசாகத்திற்குள் மடியில் குழந்தை தவழும் என்பார்கள்.

செவ்வாய் தோசம் இருப்பவர்கள் இந் நாளில் முருகனுக்கு விரதமிருந்தால் செவ்வாய் தோஷம் நீங்கும். செவ்வாய் பகவானை தோஷ காரகனாகத்தான் பார்க்கிறார்கள். செவ்வாய் யோக காரகன், தைரியகாரகன், சகோதரகாரகன், செவ்வாயின் யோகம் ஒருவருக்கு கிடைத்து விட்டால் தசாபுத்தியும் சரியாக அமைந்து விட்டால் அவர் பதவி பட்டங்கள் பெற்று வாழ்வார். செவ்வாய் தோஷத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் வைகாசி விசாகம் நாளில் விரதம் இருந்து முருகனை வணங்கினால் தோஷங்கள் நீங்கும். இந்த நாளில் செவ்வாய் பகவானின் அதிபதியும் தமிழ் கடவுளுமான முருகப்பெருமானுக்கு விரதம் இருந்து வழிபடுவது சிறப்பு.

இந் நாளில் முருகனுக்கு பால் அபிஷேகம் செய்தால் ஆயுள் கூடும் பச்சரிசி மாவில் அபிஷேகம் செய்தால் பட்ட கடன்கள் தீரும் நல்லெண்ணெயில் அபிஷேகம் செய்தால் நன்மைகள் நடைபெறும். பஞ்சாமிர்த அபிஷேகம் செய்தால் காரிய வெற்றி கிடைக்கும். சந்தன அபிஷேகம் செய்தால் சரும நோய்கள் நீங்கும். பன்னீர் அபிஷேகம் செய்து முருகனை வழிபட்டால் பார் போற்றும் செல்வம் சேரும். தம்பதி சமேதராக விசாக விரதம் இருந்து முருகனை வழிபட்டால் பிள்ளை பாக்கியம் தேடி வரும். மோர், பானகம், தயிர்சாதம் போன்றவைகளை தானம் செய்தால் பிள்ளை வரத்திற்காக தவம் இருப்பவர்களுக்கு புத்திர பாக்கிய கிடைக்கும் குலம் தழைக்கும் என்பது நம்பிக்கை. வைகாசி விசாகம் விரதம் இருப்பவர்கள் ஒருவேளை உணவு சாப்பிடலாம். மற்ற இரண்டு நேரங்களில் பால், பழம் சாப்பிட்டு விரதம் இருக்கலாம். இந்த விரதம் இருப்பவர்களுக்கு அனைத்து செல்வங்களும் கிடைக்கப் பெறும். வீட்டு பூஜையறையில் முருகப்பெருமான் படத்தை வைத்து வழிபடலாம். எதிரிகளால் ஏற்படும் ஆபத்துக்கள் நீங்கும்.

இந் நாளில் அதிகாலையில் எழுந்து குளித்து பூஜை அறையில் முருகப்பெருமான் படத்தின் முன்பு ஐந்து முக விளக்கேற்றி, முருகா என கூறி விபூதி அணிந்து வழிபட வேண்டும். ஐந்து வகை பூக்கள், பழங்களை சமர்பித்து கந்தனுக்கு பிடித்த கந்தரப்பத்தையும் வைத்து முதலில் விநாயகர் அகவல் பாடி கணபதியை வழிபட வேண்டும். பின் கந்தர் சஷ்டி கவசம், கந்தர் அனுபூதி, சுப்ரமணிய ஷோடச நாமாக்கள் கூறி அர்ச்சித்து தூபதீபம் காட்டி நைவேத்யம் செய்து வழிபட்டால் முருகனருன் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறெழுத்து மந்திரங்களான ஓம் சரவணபவ என்ற மந்திரத்தை நாள் முழுவதும் உச்சரிக்க வேண்டும். வீட்டில் கந்த வழிபாடு செய்வது ரொம்பவே விசேஷம். வைகாசி விசாக நாளில், வீட்டை சுத்தமாக்கி, பூஜையறையை சுத்தம் செய்து, கோலமிடவேண்டும். விளக்குகளுக்கு சந்தனம் குங்குமமிட்டு, விளக்கேற்றவேண்டும். முருகப்பெருமானுக்கு செந்நிற மலர்கள் உகந்தவை. அரளி, செம்பருத்தி முதலான மலர்களைக் கொண்டு வேலவனை அலங்கரிக்கலாம். வைகாசி விசாக நாளில், மனமொன்றி வழிபாடு செய்வோம். வீட்டில் விளக்கேற்றி, முருகப்பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் அல்லது எலுமிச்சை சாதம் நைவேத்தியம் செய்து பிரார்த்தனை செய்யுங்கள். முடிந்தால், இயலாதவர்களுக்கு எலுமிச்சை சாதம் வழங்குங்கள்.

கொறோனா வைரஸ் நோய் பரவி வருவதால் கோவில்கள் செல்வதை தவிர்த்து முருகனை நினைத்து வீட்டிலேயே விரதமிருந்து வழிபாடு மேற்கொள்ளல் சாலச்சிறந்தது. கொறோனா வைரஸின் தாக்கத்தால் பல லட்சம் பேர் மரணமடைந்து வருகின்றனர், அத்துடன் உலகெங்கிலும் பஞ்சம், பட்டினி தலை விரித்து ஆடுகின்றது. இயற்கையின் விந்தையை உணராத மனிதன் இப்பொழுது தான் இயற்கையின் அதிசயத்தை உணர ஆரம்பித்துள்ளன். மழைவீழ்ச்சி வீதமானது இக் காலகாட்டத்தில் குறைவடைந்து வெப்பநிலை அதிகளவாக உயர்வடைந்து உள்ளது. இதன் விளைவாக பயிற்செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. மனிதன் நீரைக்கூட பணம் கொடுத்து வங்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான். விவசாயத்தினை நம்பி வாழும் ஏழை விவசாயிகள் என்ன செய்வது என்று தெரியாது திகைத்துப் போய் உள்ளனர். ஊரடங்கு பிறப்பித்தால் அடுத்த வேளை சோற்றிற்கு என்ன செய்வது என்று அன்றாடம் கூலிக்கு உழைக்கும் மக்கள் ஏங்குகின்றனர்.

உணவுப் பொருட்களின் விலையும் தற்காலத்தில் உயர்வடைந்துள்ளமை வருந்தத் தக்கது ஆகும். எனவே இவ் உலகம் ஒருபக்கம் கொறோனா நோயினாலும் மறுபக்கம் பஞ்சத்தினாலும் பேரழிவு ஒன்றினை சந்தித்து வருகின்றது. இப் பேரழிவிலிருந்து இவ் உலகைக் காக்க இந்துக்களாகிய நாம் எம்மனதில் உள்ள பொறாமை, வஞ்சனை மற்றும் தீய எண்ணங்களை நீக்கி விட்டு இவ்வுலகில் வாழும் அனைவரும் ஒன்று கூடி கேட்டதை தரும் எல்லாம் வல்ல காக்கும் கடவுள் கந்தனருள் வேண்டி பிரார்த்திப்போமாக. கேட்கும் வரம் அனைத்தும் தந்தருள்வான் வடிவேலன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறிய போது வழிகாட்டிய தந்தை

து. சுபாசினி,
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்.

புத்தகங்கள் ஏதும் புரட்டி பார்க்கவில்லை
தகவல்கள் தேடி இணையத்தில் நுழையவில்ல
பன்னிரண்டு வருடங்கள் முன்னே சென்றேன்
என் சொந்த வாழ்வின் நினைவலைகளை மீட்க

காலத்தின் கணிப்பில் அகதிகளானோம் நாம்
வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தத்தின் பின்
முட்கம்பி வேலி முகாம்களில் வாழ்ந்தோம்
மீள்குடியேற்றம் என சொந்த ஊர் வந்தோம்

கட்டி வைத்த வீடும் இல்லை அங்கே
ஆசையாய் நட்டுவைத்த மரங்களும் இல்லை
சொந்தங்கள் வீட்டில் எத்தனை நாட்கள்
பெற்றவர்களில் மனங்களில் சொல்லொண்ணா துன்பம்

பத்திரிகை வாயிலாக வந்த செய்தி
ஏதும் அறியாமல் நிரப்பிய விண்ணப்பம்
இடப்பெயர்வின் பின் முதற்கடிதம்
யாரென்றே தெரியாது ஆறு திருமுருகன் என - கையொப்பம்

வாழ்வின் அத்திவாரம் என நினைக்கவில்லை
விடியலுக்கான நேரம் என உணரவில்லை -நான்
பெற்றவரைப் பிரிய மனமில்லாமல் அன்று
பன்னிரண்டு வயதுப் பிள்ளையாய் வெம்பினேன்.

அன்று முதல் இன்று வரை காண்கிறேன்
எளிய தோற்றத்துடனும் ஏழைகளுக்கு உதவிடும்
எம் ஐயா சின்னப் புன்னகையோடு
எல்லோரையும் வழி நடத்தும் அழகை

மேடைகள் பல ஏறி எமக்காக அவர்
வார்த்தைகளால் சித்திரம் பேசுவார்
சொல்லின் செல்வர் எம் ஐயா ஆனால்
சொன்னதில்லை தொண்டை வரண்ட கதை எமக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் பல செல்வார் எமக்காக
தனக்குள் இருக்கும் நோய்கள் பார்க்காமல்
எம் புகழ் எல்லாம் உயர்த்துவார் நாடறிய
தம் கதை ஒருபோதும் சொல்லியதில்லை

வார்த்தைகள் போதாது அவர் பணியை
வாயார நாம் சொல்வதற்கு இங்கே
ஜென்மங்கள் ஏழும் போதாது ஐயாவிற்கு
நன்றிகள் நாம் கூறிட - உலகிலே

என் வாழ்வை புரட்டிப்போட்ட அந்த
அய்யாவின் கையொப்பமிட்ட கடிதத்தினால்
பல்கலைக்கழக மாணவியாய் நான் இன்று
துர்க்காபுரம் மகளிர் இல்லத்திலே

சொல்லிவிட முடியாத சேவையை
சொல்லி காட்டாமல் செய்யும் எம் ஐயா
நூறு ஆண்டுகள் வாழ பிரார்த்திக்கிறேன்
என்றும் நன்றிக்கடன் உள்ளவளாய்

## சிவனடியார்

சிவபெருமான் தமது திருவேடமாகிய விபூதி ருத்திராட்சம் முதலிய வடிவத்தை தமது அன்பர்களிடத்துக் கொடுத்து அவர்களிடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குகின்றார்.

விபூதி ருத்திராட்சம் அணிந்து திருவைந்தெழுத்து ஓதும் மெய்யடியார்பால் சிவபெருமான் சாந்நித்தயமுற்றிருப்பர். கபடவேடமுடையார் விளங்கமாட்டார். அது தேவாரத்திலே, "நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே - புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்" என்று கூறப்பட்டவாற்றால் உணரப்படும்

சிவபத்தரை மனிதன் என்று கருதாது சிவன் எனவே கருதி மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் வழிபடல் வேண்டும். சிவபக்தரை அவமதிப்பவர் தண்டிக்கப்படுவர். விபூதி ருத்திராட்சம் முதலிய திருவேடங்கள் உடைமை, சிவோகம் பாவனை, பிராசாத யோகஞ்செய்தல், தம்மின் இரண்டறக் இயைந்த சிவத்தோடு கலந்து நிற்கும் தன்மை ஆகிய காரணங்களால் சிவபக்தர் சிவபெருமான் எனவே வழிபடற்பாலர். பட்டணத்துப் பிள்ளையார், "நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே யல்லாது நிலையுளதோ" என்றருளிச் செய்தார்.

"சிவனடியார் திருகூட்டத்தையே விரும்புவோம். பிள்ளைமைப் பருவத்தும் சிவனடியார் திருவடிப் பொடிகொண்டே வண்விளையாட்டுச் செய்யப்பெற்றோம்" என்றருளுகின்றார் சிவஸ்ரீ. அரதத்தாசாரிய சுவாமிகள்.

"குருலிங்கசங்கமம்" என்னும் தலைப்பில் அச்சுவேலி
**சிவஸ்ரீ கு. வைத்தீஸ்வரக் குருக்கள் வரைந்த கட்டுரையின் ஒரு பகுதி...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார்

யோ. வினுயா,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

நாவுக்கரசர் சமயகுரவர்கள் நால்வரில் மற்றும் தேவார மூவர்களில் "வேளாளர்" குல நாயனார் ஆவார். ஏழாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களில் ஒருவரும் சைவசமயத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் இவர் என்றும் இறைவனிடம் பக்தி செலுத்துதலில் சரியை (தொண்டை) அடிப்படையாகக் கொண்டவர் என்றும் புகழ்கின்றனர்.

திருநாவுக்கரசர் சோழ நாட்டில் திருமுனைப்பாடியில் உள்ள திருவாமூர் என்னும் ஊரில் வேளாள குலத்தில் புகழனார் மற்றும் மாதினி அம்மையாருக்கும் மருணிக்கியார் என்ற புத்திரன் பிறந்தார். இவருக்குத் தந்தையார் உரிய பருவத்திலே வித்தியாரம்பம் செய்வித்தார். மருணீக்கியார். தந்தையாருக்கும் பெருமகிழ்ச்சி உண்டாகும்படி பலகலைகளையும் கிரமமாகக் கற்று வல்லவராயினர். அத்தோடு இளமையில் சைவ சமயத்தினை விட்டு சமண சமயத்தவரானார். சமண நூல்களைக் கற்று அம்மத தலைவர்களில் ஒருவராகவும் இருந்தார். இதனால் தருமசேனர் என்றும் அழைக்கப்பட்டார்.

இவரின் தமக்கையார் சிவபக்தராக இருந்தார். அதனால் சமண சமயத்தில் தன்னுடைய தம்பி இணைந்ததை எண்ணி வருந்தி இறைவனிடம் முறையிட்டார். இதனால் தருமசேனருக்கு கடுமையான சூலை நோய் ஏற்பட்டது. சமண மடத்தில் செய்யப்பட்ட சிகிச்சைகள் பயனளிக்காமல் போகவும். திலகவதியாரின் ஆலோசனைப்படி தருமசேனர். "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். இப்பாடலால் நோய் தீர்ந்தது அதன் பிறகு சைவசமயத்தவராகி நாவுக்கரசர் என்று அழைக்கப்பட்டார்.

பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று தேவாரப் பதிகங்களைப் பாடினார். அத்துடன் சிவாலயங்களை தூய்மை செய்யும் பணினையும் செய்தார். சிவாலயங்களில் உழவாரப் பணி செய்து முன்னோடியாக இருந்தமையால் "உழவாரத் தொண்டர்" என்றும் இன்றும் சைவர்களால் போற்றப்படுகின்றார். சமண சமயத்தை சேர்ந்த மன்னன் மகேந்திர பல்லவன் திருநாவுக்கரசரைப் பலவிதங்களிலும் துன்புறுத்தினான். அத்துன்பங்களை திருநாவுக்கரசர் இறைவன் அருளால் வென்றார். இத்தகைய துன்பங்கள் இழைக்கப்பட்டும், இறைவன் அருளால் மீண்டதை, "கற்றுணைப் பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே" எனும் நமச்சிவாயப் பதிகத்தில் பதிவு செய்துள்ளார்.

தனது முதிர்ந்த வயதில் சிறுவராயிருந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடன் சேர்ந்து தலயாத்திரை செய்தார். மேலும் ஞானசம்பந்தரால் "அப்பர்" எனவும் அழைக்கப்பட்டார். இவர் பாடிய தேவாரப் பாடல்கள் 4,5,6 ஆம் திருமுறைகளில் வகுக்கப்பட்டுள்ளன. சமயத்தொண்டு புரிந்த திருநாவுக்கரசர் 81 ஆவது வயதில் திருப்புகலூரில் சித்திரை சதயத்தில் இறைவனடி சேர்ந்தார். இந் நாளிலே சைவசமயத்திற்கும் பெரும் தொண்டாற்றிய நாவுக்கரசரை என்றும் போற்றுவது இந்துக்களாகிய எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையும் நல்லெண்ணமும் கொண்ட எமது தலைவர் ஐயா அவர்கள்

**நவநாதன் மோகனாம்பாள்,**
மேற்பார்வையாளர்.
துர்க்காபுரம் மகளிர் இல்லம்

**"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை"**

எனும் தேவார வரிகளுக்கு எமது மதிப்பிற்குரிய தலைவர் கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஐயா அவர்கள் ஆற்றுகின்ற பணிகள் ஏராளம் அதில் ஒரு சிறு துளி பங்களிப்பினை வழங்குகின்ற எம்மையும் மதித்து உயரிய இடம் கொடுக்கின்ற உன்னத மனிதர் அகவை அறுபதில் காலடி எடுத்து வைப்பதில் மகளிர் இல்லத்து மேற்பார்வையாளர் எனும் வகையில் பேருவகை அடைகின்றேன். ஐயா அவர்கள் என்னுடைய மேற்பார்வைப் பணியிலே எத்தகைய நிலைப்பாடு கொண்டு நடாத்தினார் எனும் எண்ணப் பகிர்வினை இவ்விடத்தே பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

நான் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சொந்த பந்தத்தை இழந்து தனிமை எனும் நிலையில் திக்கு திசை மாறி என்ன செய்வது என்று அறியாமல் திணறிய வேளையில் இன்று உப தலைவராக இருக்கின்ற ஆறுமுகநாதன் ஐயா அவர்கள் என்னை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்திற்கு வரும் படியும் அங்கு மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றார்கள் என்று அழைத்துவந்தார்.

அதன் படி 2009-07-15 அன்று நான் அம்பாளுடைய ஆலயத்தின் முன்பாக வந்து இணைந்தேன். அப்பொழுது தலைவர் ஐயா அவர்கள் உள்ளூரில் இல்லை ஆதலால் ஐயா அவர்கள் வரும்வரை அன்னசத்திர பணிக்கு உதவி செய்தேன். மூன்றாவது நாள் ஐயா அவர்கள் வருகை தந்தார் இன்றும் என் மனதில் அச் சம்பவம் ஆழமாக பதிந்துகிடக்கிறது. அன்று செவ்வாய்க்கிழமை தலைவர் ஐயா வந்திருக்கிறார் என்று கூறி என்னை அன்னசத்திரத்தில் இருந்து அழைத்துச் சென்றார்கள். நான் மனதினுள்ளே ஐயா அவர்களை எப்படியோ எல்லாம் கற்பனை செய்தவாறு சென்றேன். ஆனால் நான் அங்கு கண்ட காட்சி எளிமையான மனிதர் நெற்றியிலே திருநீறும் காவியாலான ஒரு போர்வை மிகவும் எளிய சாதாரண வேட்டி என்னைக் கண்டவுடன் அவர் இருந்தபடி கதை கேட்க வில்லை எழுந்து நின்று வணக்கம் சொன்னார். அந்த மாமனிதனது எண்ணப்பாங்கினைக் கண்டு அன்றே வியந்து போனேன். பின் இருக்கையில் அமர்ந்த படி என் விபரங்களைக் கேட்டு அறிந்தார். அப்பொழுது ஒரு நிறுவனத்தில் மேற்பார்வையாளராக இருந்து பல பிள்ளைகளை பொறுப்பாக கவனித்தேன் எனும் செய்தியினைக் கூறினேன். அடுத்த விடயம் எதுவும் கேட்கவில்லை. உடனே யாத்திரிகர் விடுதியில் மேற்பார்வையாளராக உம்மை நியமிக்கிறேன் அங்கே பிள்ளைகளை கவனமாக பாரும் என்று கூறி அனுப்பினார்.

அங்கு சென்று பார்த்த போது தான் தெரிந்தது 83 பிள்ளைகள் அங்கே விடப்பட்டிருந்தார்கள். அப்பொழுது மேற்பார்வையாளராக இருந்து கந்தையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாட்சி அம்மையாரிடம் வினவிய போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை இடம், வயது வேறுபாடு கருத்தாது ஐயா அவர்கள் எடுத்திருக்கின்றார். இவர்களை பராமரிக்க எமது பழைய இல்லம் போதாது. ஆதலால் இங்கே விட்டிருக்கிறோம். இதுதான் தற்பொழுது இவர்களுக்கான இல்லம் என்று சென்னார். அங்கே தலைவர் ஐயா அவர்கள் வலிகளுக்கும், வேதனைகளுக்கும் எத்துணை முக்கியத்துவம் கொடுக்கின்றார் எனும் தன்மையினை நான் உணர்ந்தேன். எத்தனையோ எதிர்ப்புக்களைச் சம்பாதித்து இந்தப் பிள்ளைகளை இல்லத்தில் இணைத்திருப்பார் எனும் எண்ணப் பதிவினை என் மனதில் ஒருதரம் நிறுத்த தவறவில்லை.

யாத்திரிகர் விடுதியிலே என்னை நம்பி ஒப்படைத்த விடயத்தினை சரிவர செய்ய வேண்டும் எனும் எண்ணப் பாங்கினை எனக்குள்ளேயே விதைத்துக் கொண்டேன். 2010 காணி கொடுப்பிற்காக என்னை அழைத்த போது நான் இல்லத்தினை விட்டு வெளியேற எண்ணினேன். தலைவர் ஐயா அவர்களிடம் சென்று கூறிய போது "நீர் இந்த பிள்ளைகளை விட்டுச் சென்றால் அம்பாள் உமக்கு தண்டனை தருவாள் நீர் போகக் கூடாது" எத்தனையோ இன்னல்கள் என்னை வந்து சேர்ந்த போதும் ஐயாவின் வார்த்தை என்மனதில் ஆழமாகப் பதிந்தது.

நாம் வீட்டில் எத்தனை சந்தோசமாக இருக்கிறோமோ? அதைப்போலவே இல்லத்திலும் இருக்கின்றோம். எந்தக் குறைவும் விடுவதில்லை எம்மை மேற்பார்வையாளர் என்று ஐயாஅவர்கள் கருதுவதில்லை. பிள்ளை என்று தான் அழைப்பார். எமக்கும் உணவு, உடை, மருத்துவச் செலவில் குறைவிடுவதில்லை. எனது மருத்துவச் செலவினைத் தந்துதவிய நிலையை நான் என்றும் மறவேன். எனக்கு மட்டுமல்ல எல்லோரையும் அவ்வாறே கவனிக்கின்றார். மேற்பார்வையாளர்களுக்கான கூட்டத்தின் போது எமக்கு என்ன தேவை, என்பதனையும் பிள்ளைகளுக்கு என்ன வேண்டும் என்பதனையும் கேட்டறிந்து கொள்வார். யாத்திரிகர் விடுதியில் பிள்ளைகளை வைத்திருப்பது கடினமாக இருக்கின்றது சொன்னவுடன் சிறுவர்களுக்கென ஓர் இல்லத்தினை ஆலயத்தின் தெற்குபுற வாயிலுக்கு நேராக அமைத்துத் தந்தார். இது 2011-04-04 அன்று ஐயா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 2013-07-14 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதற்கும் பல விமர்சனங்களை இவர் கேட்க வேண்டி நேரிட்டது. அதற்கு ஐயா அவர்கள் கூறிய ஒரே பதில் "எனது பிள்ளைகள் அம்பாளினுடைய பார்வைக்கு நேராக இருக்க வேண்டும் அம்பாளின் அருட்கடாட்சப் பார்வை அவர்களை உயர்த்த வேண்டும்" என்று அதன் பின் யாரும் எதுவும் கூறவில்லை. இதுவரை 223 பிள்ளைகளை பராமரித்து பணிபுரிந்தேன். அதில் பலர் பட்டதாரிகள் ஆகிவிட்டனர். சிலர் இல்லத்தரசிகள் ஆகிவிட்டனர். "மோகனான்ரி" என என்னிடம் வந்து கதைத்துவிட்டுச் செல்லும் போது ஐயா அவர்கட்கு மனதினுள்ளே நன்றி சொல்வேன். சிறுவர் இல்லத்திலே இன்று 49 பிள்ளைகள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு ஐயா அவர்கள் எந்தக் குறையும் விடுவதில்லை அவர் நீடுழிகாலம் வாழ வேண்டும் அவரது சேவைகள் அனைத்தும் சிறக்க வேண்டும் எல்லாம் வல்ல துர்க்காதேவி அவருக்கு அருளாசி புரிய வேண்டும் என வணங்கி எனது எண்ணப்பகிர்வினை நிறைவு செய்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாட்டில் நாற்பெரும் குரவர்கள்

ச.மருதாசலன்
தெல்லிப்பழை

சைவசமய வழிபாட்டில் சமயாச்சாரியார்களுள் நால்வர், சமய குரவர்களாக போற்றப்படுவதுபோல, சைவசித்தாந்த ஆசிரியர்களில் நால்வர், சந்தானகுரவர்களாக போற்றப்படுவதுபோல, கர்நாடக சங்கீதமேதைகளில் மூவர், சங்கீத மும்மூர்த்திகளாக போற்றப்படுவதுபோல, முருகனையே முதன்மையான தெய்வமாகக்கொண்டு பாடி, வழிபட்டு, முருகபக்தியை வளர்த்த, காணுதற்கரிய முருகதரிசனம் பெற்ற நால் வரைப் பற்றி சற்றுச் சிந்திக்கலாம்.

முருகன், குமரன், குகன், விசாகன், காரத்திகேயன், காங்கேயன், கந்தன், கடம்பன் எனபப் ல பெயர்கொணட் கலியுகவரதனைக் கணடு, களித்து, பருகி, மெயய்ரும்பி, மேனி விதிர்விதிர்த்து, கைகுவித்து சூட்டிய பாமாலைகள் பல கண்டவர்கள் பலராயினும், கண்ட காலம் வேறாயினும், சூட்டிய பாமாலைகளின் இதழ்களிலும், அவைகளின் மணத்திலும் ஏற்றத்தாழ்வுகளில்லை. நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலும், அருணகிரிநாதர் திருப் புகழிலும், கச்சியப்பர் கந்தபுராணத்திலும், குமரகுருதாசர் 6666 பாடல்களையும் கந்தனை போற்றிப்பாடி, அவனின் அருளை அள்ளிப்பருகினர் என்றால் மிகையாகாது.

கி.பி இரண்டாம் நூற்றாண்டளவில் கடைச்சங்கப்புலவராய், மதுரை கணக்காயினரின் மகனாய், மதுரை நகரிலிருந்து தமிழை வளர்த்த முருகப்பெருமான்மேல் ஆழ்ந்த பக்திகொண்ட பெரும் புலவரே நக்கீரர். இவர் பத்துப்பாட்டு என்று வழங்கப்படும் நூல்களுள் முதலில் வைத்து எண்ணப்படுவதும், சைவத்திருமுறைகளிலே பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுமுள்ள திருமுருகாற்றுப்படையை, முருகப்பெருமானை பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு இயற்றியவர். ஆற்றுப்படுத்தல் எனும்சொல் வழிப்படுத்தல் எனப்பொருள்படும். திருமுருகாற்றுப்படை எனும்போது, வீடுபெறுவதற்கு பக்குவமடைந்த ஒருவனை, வீடுபெற்ற ஒருவன் வழிப்படுத்துவது என்று பொருள்படும் என்பது நச்சினார்க்கினியர் கூற்று. 317 அடிகளைக்கொண்ட ஆசிரியப்பாவாலான திருமுருகாற்றுப்படை, ஆறுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் முருகப்பெருமானின் அறுபடைவீடுகள் ஒவ்வொன்றையும் பாராட்டுவனவாக அமைந்துள்ளது.

நக்கீரர் திருப்பரங்குன்றத்திலே, ஒரு குளக்கரையிலே, தவமியற்றிக் கொண்டிருக்கும்போது ஒருஇலை, பாதி நீரிலும், பாதி நிலத்திலும் விழுந்து முறையே, பறவையாகவும், மீனாகவும் மாறி ஒன்றையொன்று இழுத்தலைக்கண்டு கவனம் தவறியது. அப்போது கற்கமுகி எனும் குதிரைத்தலையுடன் கூடிய பூதம் தோன்றி நக்கீரரை குகையில் அடைத்துவிட, தன்னையும் அங்கே அடைபட்டிருந்ந 999 பேரையும் விடுவிக்குமாறு முருகனை நோக்கிப் பாடியதே திருமுருகாற்றுப்படை. இவ்வாறு வேண்டிய மாத்திரத்தில் முருகனின் வேல் புறப்பட்டுவந்து குகையைக் கிழித்து அங்கிருந்தவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்றியதாக வரலாறு சொல்கிறது. அஞ்ஞான இருளெனும் குகையில் அழுந்திக்கிடக்கும் சீவன்களை, அதற்குக்காரணமான அறியாமை எனும் பூதத்தை அழித்து, விடுதலை தருகிறான் முருகப்பெருமான். திருமுருகாற்றுப்படை பிறந்த வரலாற்றின் அடிப்படைத் தத்துவமாக இதனைக் கொள்ளலாம்.

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டளவில், ஒட்டக்கூத்தருக்கு இரு நூற்றாண்டுகள் கழித்து, வாழ்ந்து, முருகப்பெருமானின் பிறப்பு, கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் படுதல், முருகனின் திருவிளையாடல்கள், தேவர்களை சிறைமீட்டது, சூரபன்மனை அழித்தது, வள்ளி, தெய்வானை இருவரையும் மணந்தது முதலிய இன்னோரன்ன செய்திகளை, சைவசித்தாந்தக் கருத்துக்கள் விரவிக் காவியச்சுவையுடன் கந்தபுராணமாய் தந்தவரே கச்சியப்பசிவாசாரியார்.

காஞ்சியிலே பாரத்வாஜ கோத்திரத்தில் காளத்தி சிவாசாரியாருக்கு புத்திரனாய் அவதரித்த இவரிடம் முருகப்பெருமான் கனவில் தோன்றி "திகடசக்கர..." என்று அடியெடுத்துக்கொடுத்து கந்தபுராணத்தை தமிழில் பாடும்படி பணித்தார். தினசரி தாம் எழுதிய ஏட்டுச்சுவடிகளை குமரப்பெருமானின் திருவடிகளில் வைத்து உறங்கி, எழுந்து பார்க்கையில் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குமாம். முருகப்பெருமானின் நேரடிக்கண் காணிப்பிலேயே கந்தபுராணம் எழுதப்பட்டமைக்கு இது சான்றாக அமைகிறது.

கந்தபுராண அரங்கேற்றத்தில் புலவர்கள் "திகடசக்கர..." எனும் தொடரில் இலக்கணப்பிழை இருப்பதாகக் கூறியதற்கு முருகனே, புலவனாக நேரில்வந்து "வீரசோழியம்" எனும் நூலில் 18வது பாடலைச் சுட்டிக்காட்டிய எழிலில் யாவரும் மயங்கியமை கச்சியப்பருக்கு, கந்தனின் பூரணஅருள் கிடைத்ததற்கு சான்றாக அமைகிறது.

கி.பி பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து, முருகக்கடவுளை நினைத்து திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம், திருவெழுக்கூற்றிருக்கை, திருவகுப்பு முதலிய பிரபந்தங்களை எழுதி புகழ் பெற்ற அருளாளரே அருணகிரிநாதர். இவர் இளம்வயதிலே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாலும், பெண்ணாசை இவரை தீயவழிக்கு இட்டுச்செல்கிறது. தீய பழக்கங்களால் தனது பொருள், இளமை, அழகு, அறிவு எல்லாவற்றையும் இழந்ததோடு பெருநோயும் வந்துசேர்ந்தது. எல்லோராலும் ஒதுக்கப்பட, திருவண்ணாமலை கோபுரத்தி லேறி குதிக்க முற்படுகிறார். முருகனே தோன்றி, அவரைக் காப்பாற்றியதோடு அவரது நாவிலே 'சரவணபவ' என்ற ஆறெழுத்து மந்திரத்தை பொறித்து "முத்தைத்தரு பத்தித்திருநகை..." என்று அடியெடுத்து கொடுத்து திருப்புகழ் பாடப்பணித்தார்.

சம்மந்தாண்டான் எனும் தேவிபக்தன் அருணகிரிநாதரில் கொண்ட பொறாமையால் முருகனை தோன்றச்செய்ய வேண்டுமென்று சவால்விட அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தின் வடக்கு மண்டபத்தின், வடகீழ்த்தம்பத்தில் முருகனை காட்சி தருமாறு வேண்டிக்கொண்டு "மணிரெங்கு..." எனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ் பாட மயில்வாகனன் மயில்மேலே வேல் தாங்கியபடி அனைவருக்கும் காட்சி கொடுத்து மறைந்தாரென்றால் அருணகிரியாரின் பக்தியையும், கந்தனின் அருளையும் என்னவென்று சொல்வது!

கி.பி 1850களில் திருவிராமேச்சுரதலத்திலே பிறந்து முருகனையே முழுமுதற் கடவுளாகக்கொண்டு 6666 பாடல்களை பாடியவரே பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள். அருணகிரிநாதரை தனது ஞானகுருவாகக் கொண்டவர். இளவயதிலே கந்தசஷ்டி கவசத்தை தினமும் பாராயணம் பண்ணும் இவர்; ஒருநாள் தந்தையாரோடு தமது தென்னந்தோப்பைப் பார்க்கச் சென்றபோது கையிலிருந்த கந்தசஷ்டி கவசத்தை பிரித்து பார்த்தார். தேவராய சுவாமிகளைப்போல தாமும் கந்தனைப்பாட ஆசை கொண்டார். வெள்ளிக்கிழமை சூர்யோதயத்தில் முருகனை நினைந்து, ஏடு வகிர்ந்து, எழுத்தாணிகொண்டு எழுதத்தொடங்கியபோது "கங்கையைச் சடையில் பரிந்து..." எனும் மங்கலத்தொடர் அவரின் உள்மனத்தில் தோன்றலாயிற்று. தொடர்ந்து பன்னிரு சீர்விருத்தம் பாடியருளினார்.

1923ம் ஆண்டு சுவாமிகளை குதிரை வண்டில் மோதியதில் இடது கால் முறிந்து வைத்தியசாலையில் இருந்தபோது 73 வயதாகி விட்டதால் அறுவைசிகிச்சை செய்வது சிரமமென்று மறுத்துவிட்டனர். சுவாமிகள், சண்முககவசத்தை பாராயணம் பண்ணிக் கொண்டிருந்தவர், பதினொராவது நாள் இரவு வானில் இருமயில்கள் தோகை விரித்தாடுவதைக் கண்டார். குழந்தைவடிவ முருகனும் சுவாமிக்கு, காட்சி கொடுத்ததாக சொல்லப்படுகிறது. நோய் தீருமென்ற அசரீரி கேட்டதாகவும், அதன்படி அவரும் நோய் நீங்கி, தொடர்ந்தும் எம்பிரானை பாடித்துதித்தார்.

இவர்களைப் போலவே குமரகுருபரர், தேவராயசுவாமிகள் தொடக்கம் கிருபானந்த வாரியார்வரை இன்னும் பலர் எம்பெருமான் முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடித்தொழுது, அவன் திருவடி நிழலை அடைந்தனரென்றால் இது குமரனின் அளப்பரிய கருணையேயாகும். இவர்களைப் போலவே, நாமும் கருணைக் கடலான கந்தனுக்கு, நித்தமும் பாமாலைகளைச் சூட்டி, பாடிப்பரவி, பணிசெய்து அவன் அருளைப் பெற்று, வையத்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

**நன்றி: அருள்மிகு குருநாதசுவாமி கோயில் கும்பாபிஷேக மலர் - 2020**

திருச்சிற்றம்பலம்

**காலக ளாற்பயனென் - கறைக்**
**கண்ட னுறைகொயில்**
**கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்**
**கால்க ளாற்பயனென்.**

திருச்சிற்றம்பலம்

**- ஆறாம் திருமுறை, திருநாவுக்கரசநாயனார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ உலகில் மூவகை நிலையினர்

அமரர். சிவஸ்ரீ. சி கணேசலிங்கக் குருக்கள்,

நன்னூல் ஆசிரியரான பவணந்தி முனிவர் மாணவர்களை மூன்று வகையாக வகுத்துள்ளார். முதல் மாணவன், இடைமாணவன், கடைமாணவன் என்பது அவரின் பிரிவுகள் இந்த முத்திறத்தாருடைய இயல்புகளையும் உதாரண மூலம் விளக்குகிறார்.

**முதல் மாணாக்கன்**

முதல் மாணாக்கன் அன்னத்தையும் பசுவையும் போன்றவன் என்பது அவரின் அறிவுரை அன்னப் பறவையானது பாலையும் நீரையும் கலந்து கொடுத்தால் நீரைப் பிரித்துவிட்டு பாலை மாத்திரம் உட்கொள்ளும். அத்தன்மை போல் முதன் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறாகப் பிரித்துக் குணத்தை மாத்திரம் மனதில் பதித்துக் கொள்வர். பசுவானது புல் உள்ள இடங்களில் நிறைய மேய்ந்து விட்டுப் பின்னர் ஓர் இடத்தில் இருந்து தான் உட்கொண்ட உணவைச் சிறிது சிறிதாக வருவித்து அசைபோடும். முதன் மாணாக்கனும் கல்வி நிரம்பிய ஆசிரியர்களிடத்தில் தன் உள்ளம் நிறையக் கற்றுப் பின்னர் தனியிடத்திலே இருந்து தாம் கற்றவற்றைச் சிந்தித்துத் தெளிவர்.

**இடை மாணாக்கன்**

இடை மாணாக்கர்களுக்கு மண்ணையும், கிளியையும் உதாரணமாகக் காட்டுகின்றார். மண் (பூமி) உழவர் வருந்திப் பயிர் செய்தளவு பலனையே கொடுக்கும் இடை மாணவனும் ஆசிரியர் வருந்திக் கற்பித்த முயற்சியளவு கல்வியையே கற்பர். கிளியானது தனக்குச் சொல்லிக் கொடுத்த சொல்லையன்றிப் பிறிதொன்றையும் கூற மாட்டா என்கின்றார்.

**கடை மாணாக்கன்**

கடை மாணவனுக்கு இல்லிக்குடம், ஆடு, எருமை, பன்னாடை ஆகிய நான்கு பொருட்கள் உதாரணமாகக் கூறப்படுகின்றன. பொள்ளற்குடம் நீரைவார்க்கும்தோறும் ஒழுகவிடுதல்போலக் கடைமாணாக்கனும் நூற் பொருளைக் கற்கும் தோறும் மறந்து விடுவர் என்கிறார். ஆடு பல செடிகள் தோறும் சென்று மேய்தல் போலக் கடைமாணாக்கனும் பல ஆசியர்களிடம் சென்று பாடங் கேட்பான் என்கிறார். எருமையானது குளத்து நீரைக் கலக்கிக் குடிக்கின்ற தன்மைபோலக் கடைமாணவனும் ஆசிரியரை வருத்திப் பாடங் கேட்பார் என்கின்றார். பன்னாடையானது தேன் முதலாய நல்ல பொருள்களைக் கீழே விட்டுவிட்டு அழுக்குப் பொருள்களைப் பற்றிக் கொள்ளுதல் போன்று கடைமாணாக்கனும் அறிவுநூற் பொருளை மறந்து விட்டுத் தீய பொருள்களை மனதில் பதித்துக் கொள்ளுவான் என்பது அன்னாரின் கூற்று.

**'அன்னம் ஆவே**
**மண்ணொடு கிளியே**
**இல்லிக் குடம் ஆ**
**டெருமை நெய்யரி**
**அன்னர் தலையிடை**
**கடைமா ணாக்கர்.'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி ஸ்ரீ கந்தசாமி கோவில் மஹோற்சவ நிகழ்வுகள் - 2021



தலைவாசல் கோபுரம், கட்டுமான பணியில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமகள் அழுத்தகம், சுன்னாகம். தொ.பே.: 021 224 4510

தெல்லிப்பழை கருணைமிகு காசிவிநாயகர் தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org